1053

தொகுதி 8.] 1930ஞு ஜனவரிமீ 1வ [பகுதி 12.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

10 FEB 1930

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர் மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தரி	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கோலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்தநிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

அதன்பின் ஜெகதீசன் மீனாம்பாள் விஷயத்தைப்பற்றிக் கூறத்தொடங்கி அவள் குடும்பத்தில் நடந்த அகௌரவமான விஷயங்களையெல்லாம் மறைத்துவிட்டு மீனாம்பாளின் மனத்துயரத்திற்குக் காரணமான விஷயங்களைப்பற்றி மட்டும் கூறினான்.

கோமளவல்லி இளவரசியைப்பற்றி நடக்கும் சதியாலோசனையைக் கேட்டதே "அந்தோ இத்தகைய விஷயங்கள்கூட உலகில் நடக்கின்றனவா" வென்று மிக்க வியப்பும் வியாகூலமு மடைந்தாள். அதோடு மீனாம்பாளின் இக்கட்டைக் கேட்டுக் கண்ணீர்விட்டுத் தன் காதலரை நோக்கி "தாங்கள் எப்படியாயினும் இத்தகைய சதியாலோசனையைப்பற்றிப் பரிதாபமான அந்த இளவரசிக்கு எச்சரிக்கை செய்துவிடவேண்டும்" என்றாள்.

ஜெகதீசன்:—ஓ என் அரிய காதலியே! நீ முன்பின் காணாத ஒரு ஸ்திரீயின் விஷயத்தில் இத்தகைய கருணை காட்டும் உன் பெருந்தன்மையான குணத்தைப்பற்றி நான் மிகவும் சந்தோஷ மடைகிறேன். ஆனால் இளவரசியை யித்தகைய ஆபத்தில் அமிழ்த்தும்படி சதியாலோசனை செய்திருக்கும் அச்சண்டாளர்கள் முன்னமே தங்கள் வேவுகாரர்களை யவளைச் சூழவைத்திருக்கிறார்கள். எங்கிருந்து அவளுக்குக் கடிதம் வந்தாலும் அவளிடம் நேராய்ச் சேரும்படி விடமாட்டார்கள். ஆகையால் இதைப்பற்றி இளவரசிக்கு எச்சரிக்கை செய்யவேண்டுமாயின், யாராவது தந்திரமாய் நேரில் அவளைக் கண்டு வாயால் கூறவேண்டுமேயன்றி கடிதமூலமாய் எச்சரிக்கை செய்யலாமென்பது நடக்கக்கூடிய காரியமல்ல.

கோமளவல்லி:—ஓ என் காதலரே! இதனால் நமது திருமணம் சில வாரங்களுக்குப் பதிலாகச் சில மாதங்கள்

18654

ஆலசியமாவதாயினும் தாங்களே சென்று அந்த இளவரசிக்கு இந்த ஆபத்தைப்பற்றி யெச்சரிக்கை செய்துவிடுவதே நலம்.

தன் காதலியின் மொழிகளைக் கேட்ட ஜெகதீசன் அவளுடைய கருணைநிறைந்த பரோபகார குணத்தைப்பற்றி மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து "ஓ! என் கண் மணியே! இத்தகைய அரிய பெரிய குணங்களையுடைய உயர்ந்த மாணிக்கம் எனக்கு வாழ்க்கைத் துணையாகக் கிடைத்ததை யின்றே நான் பூரணமா யுணர்ந்தேன். கடவுள் எனக்கு இத்தகைய கருணைபுரிந்ததற்காக நான் அவருக்கு எவ்வாறு என் நன்றியைக் காட்டுவதோ அறியேன். இனி யுன் பிரியப்படி நீ யனுமதியளித்தால், நான் முன்னே இதே வேலையாய்ச் சென்று இளவரசிக்கு எச்சரிக்கை செய்துவிட்டு வருவேன். இளவரசி யிப்போது அன்னிய நாட்டி லிருந்தாலும் நான் மிக்க துரிதமாய்ப் பிரயாணம் செய்து என் வேலையை முடித்துக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுவேன்.

கோமு:—அதுதான் சரி. நாம் இடையில் பிரியவேண்டியதே. இன்னொருவருடைய பெரிய ஆபத்து நீங்குவதற்காக நான் இதை மனம் சகித்துக்கொள்ள வேண்டியதே.

அதன்மேல் ஜெகதீசன் தன் காதலியிடம் விடை பெற்றுக்கொண்டு தான் இறங்கியிருக்கும் ஹோட்டலுக்குச் சென்றான். மறுநாள் காலை எட்டுமணிக்கு ஜெகதீசன் ஹோட்டலைவிட்டுப் புறப்பட்டு சுகானந்தன் என்ற குருவின் வளவிற்குச் சென்று குரு இருக்கிறாரா வென்று விசாரித்தான். வேலைக்காரி இவன் இன்னானென் றறியாளாதலால் யாரோ குருவைக்காண வந்திருக்கிறார்களென் றெண்ணி

அவனைக் குருவிருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றாள். சுகானந்தன் ஜெகதீசனைக் கண்டதும் சிங்கத்தைக்கண்ட கரிக்கன்றுபோல் இடிவிழுந்து முகம் வெளுத்து திகிலடைந்தான். மறுபடி சற்று சமாளித்துக்கொண்டு மிக்க மரியாதையோடு ஜெகதீசனுக்கு உபசாரணை செய்தான்.

ஜெகதீசன் அவனைநோக்கி "நான் உம்மிடம் கூறப் போவது இரண்டு மூன்று மொழிகளே. ஆனால் நீர் அவற்றை நன்றாய் மனதில் பதிய வைத்துக்கொள்வதோடு பிறகு அவற்றைப்பற்றி நன்கு சிந்திக்கவேண்டும். நான் இரத்தினபுரிக்குச் சென்றிருந்து நேற்றிரவு தான் வந்தேன். வந்தவுடனே நிரபராதியாகிய அக்கன்னிகையின் விஷயமாய் நீர் நடந்து கொண்ட கொடிய அநீதமும், அக்கிரமுமாகிய நடக்கைகளைப்பற்றி கேள்விப்பட்டேன்.

எனக்குண்டான கோபமும் வெறுப்பும் ஆத்திரமும் சொல்லத்தரமல்ல. அக்கன்னிகை யும்மேல் சரியானபடி வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமாயின் உமது நடக்கையை பலரு மறியும் வண்ணம் பகிரங்கப்படுத்துவதோடு நியாயாதிபதியிடமும் பிரதம குருவிடமும் பிராது செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டால், பிரதம குருவால் நீர் அவமானத்தோடு இத்தொழிலி னின்றும் நீக்கப்படுவதோடு, நியாயாதிபதியால் தண்டனையும் அடைவது நிச்சயம். உம்முடைய கௌரவமான பரிசுத்தத்தொழிலாவது பிரபு வமிசத்தைச்சேர்ந்த உமது உறவினராவது குற்றம் செய்த உம்மைக்காப்பாற்ற முடியாது. ஆயினும் இந்த அவகேட்டை பகிரங்கப்படுத்த எனக்குப் பிரியமில்லை. சில காரணங்களால் உன் விஷயத்தில் இரக்கம் காட்ட வேண்டுமென்பதே என்பிரியம், முதலாவது கோமளவல்லி முன்னமே பல குடும்ப விஷயங்களால் துயரடைந்திருக்கி

றுள். இன்னும் இவ்விஷயம் பகிரங்கப் படுத்தப்படுவதால் அவள் மனதிற்கு வருத்தம் உண்டாகலாகா தென்பது. இரண்டாவது, முன்னமே உம்முடைய அக்கிரமச் செய்கையால் அழிக்கப்பட்ட ஒருமாது கோமளவல்லியைக் காப்பாற்றி அந்த நன்றிக்கீடாக உன்மேல் கருணைகாட்டவேண்டும் என்று அவளைக் கோரிக்கொண்டாள். அவள் செய்த உதவிக்காக அவள் கோரிக்கையை யீடேற்ற வேண்டியதை யொரு கடமையாகக் கோமளவல்லி கொண்டாள். இவையன்றி யின்னும் சில காரணங்க ளிருக்கின்றன. ஆயினும் இவையே முக்கியமானவை. நீர் இனியாவது கோமளவல்லி இவ்வூரில் வசிக்கும் இன்னும் கொஞ்சகாலம் வரையில் மறுபடி யவளுக்கு இத்தகைய அக்கிரமங்களைச் செய்யக் கருதாமலிருப்பீரா என்பதே இப்போது நான் அறிந்துகொள்ள வந்த விஷயம்" என்றான்.

சுகானந்தன்:—அய்யா! நீர் இவ்விஷயத்தில் என்மீது கருணை காட்டுகிறீர் என்பதை யான் உணராமலில்லை. நடந்துபோன விஷயத்திற்காக நான் செய்தது நியாயமென்றாவது, அதற்காக நான் இப்போது விசனப்படுகிறேனென்றாவது, மனஸ்தாபப்படுகிறேனென்றாவது கூற முயல்வதில் ஒருபயனுமில்லை.

ஜெக:—செய்துவிட்ட குற்றத்திற்காக பிறகு மனமிரங்கி மனஸ்தாபப்படும் குணம் உம்மிட மிருப்பதாய், நான் கருதமாட்டேன். கடவுளே! காரணமின்றி யொருமனிதனைக் கல்நெஞ்சன் என்று நான் கருதவாவது கூறவாவது துணியமாட்டேன். ஆனால் ஒருநாள் கோயிலின் பெரிய மண்டபத்தில் ஒரு இருண்டபாகத்தில் நீரும் உமது வஞ்சகவலையிற் சிக்கி யழிந்த அம்மாதும் சம்பாஷித்துக்கொண் டிருந்ததைத் தற்செயலாய்

நான் கேட்க நேர்ந்ததால் உம்மைப்பற்றி யித்தகைய அபிப்பிராயம்கொள்ள நேர்ந்தது.

குரு:—ஓ! அய்யா தயவுசெய்து அவ்விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்காம லிருக்கப் பிரார்த்திக்கிறேன். ஒவ்வொருசமயம் சுவர்களுக்கும் செவியிருக்கலாகும்.

ஜேக:—"ஆ! கடவுளின் பரிசுத்தமான தொழிலைச்செய்யும் புண்ணியத்தைப்பெற்ற ஒருவன் மனிதர் வாயாற் கூறுவதைக் கேட்க அஞ்சும் அத்தகைய பாபத்தைச் செய்வதென்றால், அந்தோ! என்ன பரிதாபம்! என்ன பாபம். அன்று நீங்கள் இருவரும் பேசின சம்பாஷணையின் குறி நீர் ஏதோ ஒருபெரிய பாதகத்தொழிலைச்,செய்திருப்பதாகவே தெரிய வருகிறது" என்றான்.

குரு:—ஓ! ஜெகதீசம் பித்தம் பிடித்த அம்மாதின் பிதற்றல்களை நீர் அப்படியே யுண்மையென்று கருதலாகாது.

ஜேக:—அய்யா! இதைப்பற்றி நீர் ஒன்றும் கூறவேண்டாம். நான் ஒருபோதும் முட்டாள்தனமாய் ஒருவர்மேல் தப்பு அபிப்பிராயம் கொள்ளமாட்டேன். என்னைவிட அறிவிற்குறைந்தவனும், மிகக்குறைந்த உலக அனுபவமுடையவன்கூட, அம்மாது உம்மேல் சாட்டிய குற்றத்தைக் கேட்டால், நீர் மகாபாதகம் செய்தவரென்று மிகச் சுலபமா யறிந்துகொள்வான். நான் மூடனல்ல. அம்மாது கொஞ்சமாவது புத்தி பிசகியவளல்ல. அவள் பூரணமான அறிவும் மிக்க பொறுமையுமுள்ளவள் என்று நான் நன்று யறிவேன். ஆகையால் அவள் கூறிய மொழிகள் யாவும் சத்தியமொழிகளே. இப்போது அதைப்பற்றி நான் ஒன்றும் கூறக் கருதவில்லை.

நான் கூறுவதெல்லாம் கூடி, நீர் மறுபடி கோமளவல்லிக்கு எள்ளளவு இடையூறுவது செய்ய முயன்றீரோ மறுபடி எவ்வித எச்சரிக்கையும் செய்யாமல் நீர் தக்க தண்டனை யடையும்படி செய்துவிடுவேன் என்று கூறிவிட்டு உடனே அங்கிருந்து எழுந்து சென்றான்.

சுகானந்தன் மிக்க அவமானத்தோடும் திகிலோடும் ஒன்றும் தோன்றாமல் கலங்கிய மனதோடு பதில் கூற முடியாமல் ஆசனத்தில் பிரமித்து உட்கார்ந்தபடி யிருந்தான்.

அந்தோ அற்ப புத்தியால் முன்பின் யோசியாமல் கேவலமான இச்சைகளில் மனம் செல்லும்படி விட்டுவிடுகிற ஒருவன், பிறகு அனுபவிக்கும் தீராத திகிலுக்கும் அவமானத்திற்கும் ஒரு அளவாவது முடிவாவது உண்டோ? சாதாரணமாய்த் தனக்கிருக்கும் அந்தஸ்திற்குத் தன்னைக் கண்டதே மிக்க மரியாதையோடு வணக்கங்காட்டி எவ்வளவோ தாழ்மையோடும் அச்சத்தோடும் பேசவேண்டிய ஒருவனைக்கண்டு தான் தலை நாணி அச்சத்தோடு அடக்க ஒடுக்கமாய்ப் பேசவேண்டி நேரிடுகிறது. கொஞ்சம் அறிவுடைய எவனும் இத்தகைய கேவலநடக்கைகளுக்கு இடங்கொடுக்கவே மாட்டான்.

ஜெகதீசன் குருவை விட்டுப் புறப்படும்போது காலை ஒன்பது மணி யிருக்கும். அங்கிருந்து நேராய் கோமளவல்லியின் வீட்டிற்குச் சென்றான். அங்கு தன் காதலியாலும் மீனும்பாளாலும் மிக்க அன்போடு வரவேற்றுக் கொள்ளப்பட்டபின் அவர்களோடு காலைப்போசன மருந்தியபின், மீனும்பாளை நோக்கித் தான் இளவரசி இருக்குமிடத்திற்குச் சென்று அவளை நேரிற்கண்டு எச்சரிக்கை செய்யப் போவதாகவும், ஆனால் "உன் சகோதரிகளுக்கு ஒரு இடையூறும் செய்யமாட்டேன், என்னால் கூடியவரையில் அவர்களை யக்தக்

கொடிய செய்கையினின்றும் விலகிவிடும்படி புத்தி கூறிப் பார்ப்பேன்" என்று கூறினன்.

அக்கன்னிகை அவன் நல்ல எண்ணத்திற்கும் அவன் பெருந்தன்மையான செயல்களுக்கும் மிக்க வியப்புற்று வந்தனமளித்துத் தன் நன்றியை வெளியிட்டாள். அதன் பிறகு காதலர் இருவரும் தோட்டத்திற்குள் உலவச் சென்றார்கள். ஜெகதீசன் அச்சமயத்தில் தான் சுகானந்தனைச் சந்தித்துப் பேசிய விஷயங்களை மொழிந்து இனி யவன் உன் ஜோலிக்கு வரவேமாட்டானென்று நான் பூரணமாய் நம்புகிறேன் என்று கூறினன்.

அன்று பகல் பனிரெண்டு மணிக்கு ஜெகதீசன் கந்தபுரியிலிருந்து புறப்பட்டான். அவன் தபால் வண்டியில் ஏறும்போது காதலரிருவரும் மிக்க அருமையாய்ப் பிறிந்தார்கள். கோமளவல்லி பிறர் ஆபத்தை நீக்க வேண்டுமென்று தன் மனம் துணிந்து தன் காதலனை யனுப்பிய போதிலும் அச்சமயம் பிறிவாற்ற முடியாமல் கண்களில் நீர் ஆறுய்ப் பெருகத் தன் மனைக்குத் திரும்பினுள்.

36-வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் கண்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் காலை ஒன்பது மணிக்கு நமது துப்பறியும் சிங்கமாகிய செல்வநாதன் வீட்டில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

செல்வநாதன் வீட்டிலுள்ள சுத்தமான போஜனஅறையில், ஒரு மேஜையின் மேல் அறுசுவையுண்டிப் பரிமாறப்பட்டிருக்கிறது. செல்வநாதனும் ஜனகன் என்ற வாலிபனும் உட்கார்ந்து சந்தோஷமாய்த் தங்கள் எதிரிலுள்ள

நேர்த்தியான ஆகாரங்களை யருந்திக்கொண்டே சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார்கள்.

செல்வநாதன் தன்னிடமுள்ள நேர்த்தியான சாராயத்திற் கொஞ்சம் வாலிபனுக் களித்து "சிறுவனே! இப்போது நான் கூடியவரையில் உன்னிடம் மறைந்துள்ள அருமையான நன்னோக்கங்களையும், உன் சுபாவகுணத்தையும் அறிந்து கொண்டேன். இப்போது வேண்டுமாயின் உன் நடவடிக்கைகளைப்பற்றி நான் தெளிவாய்க்கூறுவேன்" என்றான்.

ஜனகன்:—"ஆ! அப்படியா தங்களுக்கு அது விஷயத்தில் பிரிய மிருக்குமாயின் அப்படியே கூறுங்கள்" என்றான்.

செல்வ:—"ஆம் நான் அதைக்கூற விரும்புகிறேன். ஏனெனில் நான் உனக்கு என்ன நன்மை செய்தாலும், எல்லா சங்கதிகளும் தெரிந்து என் கண்களைத் திறந்து கொண்டே செய்கிறேனே யொழிய, நீ யுன் சாமார்த்திய தந்திரத்தால் என்னை எள்ளளவும் மயக்கி ஏமாற்றிவிடவில்லை யென்றும் நான் உன் தந்திரத்தை யறியாமல் மூடத்தனமாய் மயங்கிப்போய் அப்படி நடக்கவில்லை யென்றும், நீ நன்றாய் அய்யமின்றி அறிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே ஜனகன் முகம் வேறுபட்டது. ஏனெனில் ஓஹோ நமது மனதில் நாம் ஆழத்தில் புதைத்து மறைத்து வைத்திருக்கும் இரகசியத்தை இவன் எப்படியோ அறிந்து கொண்டான்போ லிருக்கிறது என்று அவனுக்குப் பீதியுண்டாய் விட்டது. அவன் செல்வநாதனை நோக்கி "தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை" என்றான்.

செல்வ:—"வாலிபனே! ஒருவனைக் கெட்ட வழியிலிருந்து நல்வழிக்குத் திருப்புவதெனில் அது ஒரு நாளில் நடந்துவிடக்கூடிய விஷயமல்ல. இப்போது நான் கூறப்போகும் சங்கதியைப்பற்றி நீ சற்றேனும் விசன மாவது மனவருத்தமாவது கொள்ளவேண்டிய கார ணமேயில்லை. சாதாரணமாய் நீ யுன் துர் அதிட்ட வசத்தால் ஆதிமுதல் சூது, வஞ்சனை, மோசம், கப டம்; களவு முதலிய இடங்களில் பயிற்சி செய்யப் பட்டவன். தேகத்தில் அழுக்கு ஒட்டிக்கொண்டிருப் பது போல் அக்குணங்களின் வாசனையாவது உன்மன தில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

நேற்று நான் உன்னை யென்கூட வரும்படி யழைத்த போது தானப்பன் உள்ளத்தில் மிக்கசந்தோஷமடைந்தான். நீ உடைகளை யெடுத்து வர உள்ளே சென்றபோது அவன் மிக்க ஆத்திரத்தோடு உன் பின்னால் ஓடிவந்தான். மேலுக்கு உன்னை நல்ல உடைகள் எடுத்துச் செல்லும்படி செய்ய வரு பவன் போல் அபிநயம் செய்தான். உண்மையில் உன்னிடம் வந்ததும் "உன்னால் கூடிய வரையில் செல்வநாதன் செய் கைகளையும் எண்ணங்களையும், இரகசியங்களையும் கண்டறிந்து கொண்டுவா" என்று உனக்குக் கற்பித்தான்......" என்ற போது,

ஜனகன் திடுக்கிட்டு முகத்தில் மிக்க கலவரக்குறி தோன்ற "ஆ! அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என் றான்.

செல்வநாதன்:—"அநுபவத்தால் தான். வேறில்லை. இதோ இப்போது உன் முகத்தில் உண்டான கலவரத்தால் நான் உத்தேசித்தது உண்மையேயென்று தெரிகிறதல் லவா. இருக்கட்டும். ஆகையால் நேற்று நான் உன்னை

யழைத்து வரும்போதே நாம் நமது இரகசியங்களைக் கண்டு பிடிக்கக் கருதும் ஒரு வேவுகாரனையே நமது மனைக்கு அழைத்துச் செல்கிறோம் என்று அறிவேன். ஆனால் அதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. ஏனெனில் நான் உன் நிலைமையைக் கண்டு இரக்கம் கொண்டு உனக்கு நன்மை செய்யவேண்டு மென்று என்மனதில் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன். நீ முன்னுக்கு க்ஷேமமடைய வேண்டுமென்பதில் சிரத்தை கொண்டிருக்கிறேன். நீ யென் வீட்டிற்குள் நுழையும்போது கண்களையும் செவிகளையும் மிக்க எச்சரிக்கையாய் வைத்துக் கொண்டிருந்து இங்கு அறிந்துகொள்ளக்கூடிய யாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோ டிருந்தாய். ஆனால் கொஞ்சநேரம் நாம் இருவரும் சம்பாஷிப்பதற்குள் நீ அதை யடியோடு மறந்து சம்பாஷணையில் மிக்க கவனமுடையவனாய் விட்டாய். பொழுது போகப் போக உனக்கு என்மேல் பிரியம் அதிகமாகத் தொடங்கிற்று. இரவு நேர்மையான வழியில் நடப்பதனாலுண்டாகும் நன்மைகளைப் பற்றி நான் கூறியபோது உன் மனம் கரைந்து விட்டது. இப்போது இரண்டு மணி நேரமாய் நாம் பேசியதில் சந்தர்ப்பம் மட்டும் கிடைத்தால் நாமும் யோக்கியமான வழியில் நடக்கத் தொடங்கவேண்டும் என்று உனக்கு ஆவல் உண்டாயிற்று. இப்போது நான் கூறிய யாவும் உண்மையா அல்லவா கூறு!'' என்றான்.

ஜனகன்:—“யாவும் பூரணமாய் உண்மையே'' என்றான்.

செல்வநாதன்:—“இப்படி யிருந்தும் ஒவ்வொருசமயங்களில் பழய வாசனை யுன் மனதில் கிளம்பி“சே நாமேன் பழைய

வழிகளிலிருந்து திரும்ப உத்தேசிக்கிறோம்" என்ற மயக்கத்தை யுண்டாக்குகிறது; அப்போது மனச்சஞ்சல மடைகிறாய். இது சுபாவமே. நீ பூரண மாறுதலை யடையக் கொஞ்ச காலம் செல்ல வேண்டுவதோடு கொஞ்சம் கஷ்டமும் எடுத்துக்கொள்ள வேண்டும், உன்னைப் பழைய வழியில் அடியோடு திருப்பிவிடக் கொஞ்சம் துர்ப்போதனையும் தூண்டுதலும் நேரிட்டால் போதும். இதுகாறும் நீ யுனக்குப் பயிற்சி செய்யப் பட்ட அத் துர் வழிகளிலேயே தாராளமாய் நடந்து கொண்டிருந்தவனாகலால், இப்போது திடீலென்று நல்வழியில் அடியோடு திரும்பி நடப்பதென்றால் ஆரம்பத்தில் அது தொந்திரை யுடையதாகவே தோன்றும். ஆனால் நீ அப்படி நல்வழிக்குத் திரும்பக் கூடாத விதமாய் அவ்வளவு அடியோடு கெட்டுப் போகவில்லை. நீ மட்டும் எனக்கு அனுமதி யளித்தால் நான் உன்னை நல் வழிக்குக் கொண்டு வந்து நிலை நாட்டி உனக்கு க்ஷேமமும் சந்தோஷமும் உண்டாகச் செய்ய இது முதலே முயற்சி யெடுத்துக் கொள்வேன்" என்றான்

இம்மொழிகளைக் கேட்ட வாலிபன் மனங்கரைந்து "அய்யா! இத்தகைய கருணையான உபகாரத்தை யொருவன் எப்படித்தான் வேண்டாம் என்று கூறுவான்?" என்று மனப்பூர்வமாய் மொழிந்தான்.

செல்வ:—அப்படியானால் நான் கூறிய ஏற்பாடுகளுக்கு நீ ஒப்புக்கொள்கிறாயா?

ஜனகன்:—"ஆகா! சந்தேகமின்றி யொப்புக்கொள்வதோடு மறுபடி என் உயிருள்ளமட்டும் இந்த வாக்குத்தத்தத்தினின்றும் பிறழவே மாட்டேனென்று சத்தியமாய்க் கூறுகிறேன்" என்று உற்சாகத்தோடு மொழிந்தான்.

செல்வ:—அப்படியானால் நான் எவ்வாறு உன்னைப் பயிற்சி செய்கிறேனோ அவ்வாறே நீ நடந்து கொள்ள வேண்டும்.

வாலிப:—"ஆகா. எல்லா விஷயங்களிலும் தங்கள் கட்டளைப்படிக்கும் புத்திமதிப்படிக்குமே நடந்துகொள்ளச் சித்தமா யிருக்கிறேன்" என்றான்.

செல்வ:—"சரி, ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குமட்டும் பதில் கூறு. நீயே யொரு கள்ளனா யிருப்பதற்குப் பதிலாகக் கள்ளனைப் பிடிக்கிறவனாயிருக்க உனக்குப் பிரியமா கூறு பார்ப்போம்" என்றான்.

வாலி:—தாங்கள் மட்டும் நேற்று நாம் இங்குவந்தவுடனே முதலாவதாக இக்கேள்வியைக் கேட்டிருப்பீரானால் நான் கட்டாயம் மாட்டேன் என்றே கூறிவிட் டிருப்பேன். ஆனால் இப்போது தாங்கள் தங்கள் துணிகரச் செயல்களையெல்லாம் கூறி, எனக்கு இவ்வளவு புத்திமதிகளையும் கூறியதோடு என் விஷயத்தில் இத்தகைய அன்பு பாராட்டுகிறவரையில், மாட்டேனென்று ஒருபோதும் கூறமாட்டேன்; ஆனால் மனப்பூர்வமாய் ஆகட்டும் அப்படியே செய்கிறேன் என்று கூறிவிடவும் எனக்கு மனம் வரவில்லை.

செல்வ:—"நீ மனதில் ஒன்றையும் ஒளிக்காமல் இம்மாதிரி கூறியதைப்பற்றி நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நீ சூது, கபடு, வஞ்சம், களவு முதலிய வழிகளிலேயே யிதுகாறும் நடந்துவந்தபடியால் திடீலென்று ஏககாலத்தில் அடியோடு திரும்பிவிடுவது முடியாதகாரியந்தான். உனக்குப் பழக்கமான அதே குணங்களை நீ யுபயோகித்து வரவேண்டும். ஆனால் அவற்றை முன் உபயோகித்த வழியில் உபயோகிக்காமல் வேறு வழியில் உப

யோகிக்க வேண்டும். சூது, தந்திரம், சாமார்த்தியம் முதலிய அக்குணங்களை இதுவரையில் இதுகாறும் நீயே களவாடுவதில் உபயோகித்து வந்தாய். இனி யதே சாமார்த்தியங்களைக் கள்ளரைக் கண்டுபிடிப்பதி லும் அவர்கள் களவாடிய உளவுகளை யறிவதிலும் உப யோகிக்கவேண்டும். நான் கூறுவது உனக்கு நன்ருய் விளங்குகிறதா?'' என்ருன்.

ஜனகன்:—எனக்கு நன்ருய் விளங்குகிறது. இதற்காகவே தாங்கள் என்னைத் தங்கள் சொந்த சேவகனாக ஏற்றுக் கொண்டு என்னைத் துப்பறிபவனுகச் செய்துவிடக் கருதுகிறீர்கள்.

செல்வ:—ஆம், அதுவே என் பிரியம். இதன்படி நடக்க உனக்குச் சம்மதமாயின் இதுமுதல் இனி இங்கேயே நேற்று முதல் இருப்பதுபோல் சாப்பிட்டுக் கொண்டு சந்தோஷமாயிரு. வேடிக்கையாகச் செலவழிக்க கைப் பணம் தாராளமாய்த் தருகிறேன். பிறகு கூடிய சீக் கிரத்தில் நமது இராஜாங்கத்தில் உன்னையும் ஒரு துப்பறி யும் ஆரம்ப உத்தியோகஸ்தனுகத் தாக்கல் செய்துவிடு கிறேன். என்ன சொல்லுகிருய்?

ஜனகன்:—நான் இரண்டொரு நிபந்தனைகளின்மேல் தங் கள் பிரியப்படி யொப்புக்கொள்ள ஆயத்தமாயிருக்கி றேன்.

செல்வ:—சரி. உன் நிபந்தனைகளைக் கூறு.

ஜனகன் :—முதலாவது என் கூடப் பிறந்தவர்கள்போல் நான் பாவித்துக்கொண்டிருக்கும் இராசப்பன், காமா ட்சி இவர்களில் ஒருவருக்கும் தீங்கு செய்யும்படி எனக்குக் கட்டளையிடலாகாது.

செல்வ:—சரி. அப்படியே யொப்புக் கொண்டேன்.

ஜனகன்:—இரண்டாவது, தாங்கள் தங்களுக்கு அவகாசம் இருக்கும் காலங்களில் தயவு செய்து கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டு என் பெற்றோர் யார், இப்போ திருக்கிறார்களா என்று கண்டுபிடிக்க முயல வேண்டும்.

செல்வ:—சரி, அதற்கும் சம்மதிக்கிறேன். அப்புறம்?

ஜனகன்:—மூன்றாவது தாங்கள் தானப்பனுக்கு நேராய்க் கெடுதி செய்யும்படி என்னை யொருபோதும் கட்டாயப் படுத்தவேண்டாம். ஏனெனில் அவன எவ்வளவோ அயோக்கியனும் முரடனும் துஷ்டனுமாயினும் நான் இதுகாறும் அவன் குடும்பத்தில் போஷிக்கப்பட்ட வனாயிருக்கிறேன்.

செல்வ:—சரி. உன் குணவிசேஷத்திற்காக மிக்க சந்தோஷ மடைகிறேன். நான் ஒருபோதும் தானப்பனுக்கு நேரா ய்க் கெடுதி செய்யும்படி உனக்குக் கூறவே மாட்டேன். இன்னும் என்ன நிபந்தனை யிருக்கிறது?

ஜனகன்:—இவ்வளவே. வேறொன்றுமில்லை.

செல்வ:—சரி நமது ஒப்பந்தம் பூரணமாய்விட்டது. ஆனால் உன் உண்மையைச் சோதிப்பதற்காக நீ சம் பந்தப்பட் டிருக்கும் விஷயத்தைப்பற்றியே ஒரே யொரு கேள்விகேட்க விரும்புகிறேன்.

வாலி:—சரி கேளுங்கள். நான் களங்கமின்றி உள்ளது உள்ளபடியே கூறிவிடுகிறேனே இல்லையோ பாருங் கள்.

செல்வநாதன் ஜனகன் முகத்தின்மேல் நாட்டிய உறுதியான பார்வையோடு, "கடந்த திங்கட்கிழமை யிரவு எட்டுபேர் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து இளவரசன் வண்

டியை மடக்கி அதிலிருந்தவர்களை எங்கோ ஒருவிடத்திற்குப் பிடித்துக்கொண்டு சென்றார்களே, அதில் நீ யொருவனு யிருந்தாயா இல்லையோ கூறு'' என்றான்.

வாலிபன் இக்கேள்வியை யெதிர்பார்க்கவே யில்லையாதலால், இதைக் கேட்டதும் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்து சற்றும் யோசிக்காமல், "ஆம் நான் ஒருவனுயிருந்தேன். ஆனல் அதைப்பற்றி இப்போது ஏதேனும் குழப்பம் நேரிடுமோ?'' என்று மிக்க ஆவலோடு கேட்டான்.

செல்வ:—குழப்பம் ஒருபோதும் நேராது. எனக்குமட்டுமே அதைப்பற்றிய எல்லாவிஷயங்களும் தெரியும். அப்படிப்பட்ட சங்கதிக ளனைத்தும் நேரகவாவது ஒருவர் மூலமாகவாவது எப்படியாயினும் என் செவிகளுக் கெட்டிவிடும் என்று நீ இதுகாறும் உணர்ந்துகொண் டிருப்பாய். அது ஒரு அதிசயமான சம்பவம். அது எதற்காக நடந்தது என்ற மர்மம் உங்களில் ஒருவருக்குமே தெரியாது. ஆயினும் ஒருநாளைக்கு நான் உனக்கு அந்த மகாமர்மத்தைக் கூறுவேன்.

ஜனகன்:—அப்படியாயின் அது களவாடுவதற்குமட்டுமே நடந்ததல்லவோ?

செல்வ:—ஒருபோதுமல்ல. நீயும் உன் கூட்டாளிகளும் அந்த வீட்டில் ஒருமணிநேரத்திற்குமேல் தங்கியிருந்தீர்களல்லவா. இளவரசனையும் அவன் கூடவந்த அந்தப் பிரபுவையும் களவாட அவ்வளவு நேரமேன்?

வாலி:—ஆம் உண்மையே. நான் இதற்குமுன் இதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. இப்போது தாங்கள் கூறிய குறிப்பால் எனக்குத் தெரிகிறது. களவாட வேண்டியது மட்டுமே கருத்தாயில், இளவரசனுடைய வண்டியை மடக்கி நிறுத்தினேமே அங்கேயே யவ்வேலையை

முடித்துக்கொண் டிருக்கலாம். அதைவிட்டு வீணாய் அங்கிருந்து தூரத்திலிருக்கும் அவ்வீட்டிற்கு அவர்களைக் கொண்டுபோய் ஒருமணிநேரங் கழித்து மறுபடி வண்டியை மடக்கியவிடத்தில் அவர்களைக் கொண்டு போய் விடவேண்டியதில்லை.

செல்:—அது சரிதான். அவ்வீட்டிற்குச் சென்றபின் நீங்கள் அங்கு சாராயம் அருந்தியதால் எவ்வளவு காலம் அங்கு தாமதித்ததும் உனக்குச் சரியாய்த் தெரியாதென்று கருதுகிறேன்.

ஜன:—உண்மையைக் கூறுகிறேன். அங்கு சென்றதே எங்களில் ஐந்தாறுபேர் எங்கள் முகமூடிகளைக் கழற்றிவிட்டு அருகிலிருக்கும் ஒரு ஹோட்டலுக்குச்சென்று சாராயம் அருந்தினோம்.

செல்வ:—"பேஷ். குடிக்காமல் எந்த வேலையும் நடவாது போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டே தன் ஆசனத்தை விட்டெழுந்து, "ஜனகா நான் ஒரு முக்கிய விஷயமாய் வெளியிற் செல்லவேண்டும். ஆகையால் மாலை மூன்றுமணி வரையில் நான் உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும். இந்தா கொஞ்சம் பணம் இருக்கிறது. நீ இதை யெடுத்துக்கொண்டுபோய் வேடிக்கையாய் நான் வருமட்டும் காலத்தைச் செலவழித்து வாலாம்.

ஜன:—வெளியில் செல்வதைவிட தங்கள் சரித்திர புத்தகத்தை வாசித்துக்கொண்டு நான் வீட்டிலேயே யிருப்பேன்.

செல்வ:—ஆ! நான் என் இரகசிய சரித்திரத்தை யுனக்களிப்பதாய் வாக்குத் தத்தம் செய்திருந்தேன். ஆனல்

இச்சமயம் அதை யெடுத்தளிக்க அவகாச மில்லையென்று விசனிக்கிறேன். நாளைக்குத் தருவேன்.

வாலி:—அப்படியாயின் இதோ அலமாரியிலிருக்கும் புத்தகங்களையே வாசித்துக்கொண்டிருப்பேன்.

செல்வநாதன் "சரி அவ்வாறே செய். நமது வீட்டிலுள்ள காமாக்ஷியம்மாள் உனக்கு வேண்டியவற்றையுடனே அளிப்பாள்" என்று கூறிவிட்டு எழுந்து தன் இரகசிய அறைக்குச் சென்றான்.

அவன் இரகசிய அறையில் சுமார் அரைமணி நேரமிருந்து வெளியில் புறப்படும்போது பார்த்தால் அவனையீன்ற அன்னை கூட அவனை யின்னானென் றறிந்துகொள்ள முடியாது. அவன் தன் இரகசிய அறையிலிருந்து வெளிப்பட்டதும் வீட்டின் பின்பக்கமுள்ள இரகசிய வழியாய்ப் புறப்பட்டு சற்று தூரத்திலிருந்த ஒரு வண்டி மேட்டிற்குச் சென்று ஒரு வாடகை வண்டி பேசிக்கொண்டு ஏதோ ஒரு வீதியின் பெயரைக் கூறி அங்கு செல்லும்படி சாரதிக்குக் கட்டளையிட்டான்.

---

37 - வது அத்தியாயம்.

இரத்தினபுரி நகரின் மத்திய ஸ்தானத்திற்குச் சுமார் ஐந்தாறுமைல் தூரத்தில் உள்ள வெளிப்பேட்டை என்றவிடத்தில வாசுதேவ நிலையம் என்ற ஒரு மாளிகையிருக்கிறது. அது ஒரு புராதனமும் விசாலமுமான கட்டிடம். அதன் வலப்பக்கத்திலுள்ள மதில் சுவரில் ஒரு பெரிய வாசற்படி யுண்டு. அதுதான் சாதாரணமாய் யாவரும் மாளிகைக்குள் செல்லும் வழியாயுள்ளது. அம்மாளிகை இராஜ பாட்டையிலிருந்து சுமார் ஐம்பதுகஜ தூரத்திலிருக்

கிறது. பாதையிலிருந்து இருபுறங்களிலும் அடர்ந்த விருட்சங்களையுடைய ஒரு குறுகிய பாதையும் மாளிகைக்குச்செல்கிறது. அப்பாதை இராஜபாட்டையிலிருந்து பிரியுமிடத்தில் ஹோட்டல் இருக்கிறது. அதற்குச் சுகவிலாஸ் என்று பெயர்.

அம்மாளிகை வாசுதேவப் பிரபு என்ற ஒரு செல்வந்தனுக்குச் சொந்தமாயிருந்தது. அப்பிரபு தன் துர்ச்செய்கைகளால் க்ஷீணதசை யடைந்து நமது கதை ஆரம்பமாக ஐந்தாறு மாதங்களிருக்கையில் நாட்டையே விட்டு ஓடிவிட்டான். அதுமுதல் இப்போது நாம்கூறப்போகும் சம்பவங்கள் நடக்கும் காலம்வரையில் அம்மாளிகையில் ஒருவரும் வாசம் செய்துகொண் டிருக்கவில்லை.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் வெள்ளிக்கிழமை பகல் சுமார் பனிரண்டரை மணிக்கு ஒரு தபால்காரன் அக்குளில் இடுக்கிய குடையோடும் கையில் பிடித்த கடிதக்கட்டுகளோடும் அத்தொழிலாளிகளின் சுபாவப்படி மிக்க அவசரத்தோடு சுகவிலாஸ் என்ற ஹோட்டலுக்குள் நுழைந்து, ஹோட்டல் முதலாளியை நோக்கி பானத்திற்கு ஒரு கிண்ணம் பீர் கொடும் என்றான்.

ஹோட்டல்காரன் பீரைப் பாத்திரத்தில் விட்டுக்கொண்டிருக்கையில் தபால்காரன் "எதிரிலுள்ள மாளிகையில் இப்போது யார் வாசம் செய்கிறார்கள்?" என்று கேட்டான். ஹோட்டல்காரன் அவர்கள் பெயர் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாதென்றான்.

தபால்காரன் தன் கரத்திலிருந்த ஒரு கடிதத்தின் மேல்விலாசத்தைப் பார்த்துக்கொண்டே "அவர்கள் பெயரென்ன? சனியன் இந்த எழுத்துகள் சற்றும் விளங்கவில்லை" யென்றான்.

ஹோட்டல்காரன் பீர் கிண்ணத்தை யவன் கரத்தில் அளித்துக்கொண்டே "அவர்கள் பெயர் பொன்னுசாமிப் பிள்ளையும் அவர் மனைவி பத்மாட்சியம்மாளும்" என்றான்.

தபால்காரன் "ஆ! சரிதான் சரிதான்" என்று கூறி விட்டுப் பானத்தை யருந்தியபின் அதன் கிரயத்தை ஹோட்டல் காரனுக் களித்துக்கொண்டே, "அவர்கள் இங்குவந்து நெடுநாட்களாகி யிராதென்று கருதுகிறேன். அல்லவா?" என்றான்.

ஹோட்டல்காரன்:—அவர்கள் வந்து ஒருவாரத்திற் கதிகமாயிராது. நீ யிந்தப் பாகத்திற்குக் கடிதம் பட்வாடா செய்ய இப்போதுதான் புதிதாய் வந்ததுபோல் காண்கிறது.

தபால்காரன்:—"ஆம், இடையில் கொஞ்சகாலத்திற்கே. எதோ இன்னொரு கிண்ணம் பீர் கொடு. இது மிக்க நேர்த்தியா யிருக்கிறது. அடிக்கடி இவ்வளவு நல்ல தினுசு கிடைப்ப தருமை.

இம்மொழிகளைக் கேட்டதே ஹோட்டல்காரன் மிக்க சந்தோஷமடைந்து "ஆமாங்கோ. உங்களைப்போல் அருமை தெரிந்தவர்களுக்குத் தான் இதன்குணம் தெரிகிறது. மூடர்கள் சரக்கின் நோட்டமே தெரியாமல் வாயில் வந்தபடி யுளறுகிறார்கள்" என்றான்.

தபால்:—"நீ யந்தச் சதி புருடர்களை யெப்போதேனும் பார்த்திருக்கிறாயோ? நான் தெற்குப்பேட்டை பீட்டில் இருந்தபோது அங்கிருந்த ஆசாமிகளாகத்தான் இவர்க ளிருக்கவேண்டுமென் றெண்ணுகிறேன்" என்று எதோ அசட்டையாய்க் கேட்பவன்போல் பீரை ருசி பார்த்துக்கொண்டே வினவினான்,

ஹோட்டல்காரன்:—நான் பொன்னுசாமி பிள்ளையைமட்டும் இரண்டொரு தடவைகளில் கண்டிருக்கிறேன் அவர் சற்று வயது முதிர்ந்தவரே. நன்றாய்ப் பேசுகிறார். இங்கு கிடைக்கும் பிராந்தி பாஞ்சால நாட்டில் எங்கும் கிடைக்காதென்று கூறுகிறார்.

தபால்காரன்.—ஆ! அப்படியாயின் அவர் பாஞ்சாலநாட்டிலிருந்து வந்தவரா யிருக்கவேண்டும்.

ஹோட்டல்காரன்:—இருக்கலாம். அவர் மனைவியை நான் கண்டதில்லை, அம்மாது சற்று சௌக்கியத் தாழ்வா யிருப்பதாய் அவள் கணவன் கூறினார்.

தபால்காரன்:—அவர்களிடம் வேலையாட்க ளிருக்கிறார்களோ ?

ஹோட்டல்காரன்:—ஒருவரும் கிடையாது. முன் இருந்த பிரபு அவ்வீட்டில் ஒரு கிழவனையும் அவன் மனைவியையும் வைத்துவிட்டுப் போனான். அவர்கள் மட்டுமே யங்கு வசித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் நெடுநாள் இங்கிருப்பார்க ளென்று நான் நினைக்கவில்லை. அங்கிருக்கும் கிழவன் பெயர் தானு. அவன் அப்போதைக் கப்போது இங்கு வந்து கொஞ்சம் பீர் அருந்துவதுண்டு. அவன் கூறியதால் அவர்கள் சதிபுருடர் இருவரும் நேசமாய் இருப்பதாய்த் தெரியவில்லை. அடிக்கடி அவர்களுக்குள் கொடிய சச்சரவு நடப்பதாய்த் தெரிகிறது.

தபால்காரன்:—"சரி சரி. அப்படியானால் அவர்கள் நான் கூறிய ஆசாமிகளே. என் வரையில் மிக்க நல்லவர்கள். பிரதி வருடப்பிறப்பிற்கும் பரிசளிப்பார்கள்" என்று கூறிக்கொண்டே மறுபடி வாங்கிய பீருக்குப் பணம் கொடுத்துவிட்டு நான் போய் வருகிறேன் என்று

ஹோட்டல்காரனுக்கு வந்தன மளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

தபால்காரன் ஹோட்டலை விட்டுப் புறப்பட்டு நேராய் வாசுதேவ நிலயத்திற்குச் சென்று தெருவாசற்படி வழி நுழையாமல் பக்கத்திலிருந்த ஒரு வாசற்படியின் கதவைத் தடதடவென்று தட்டினன். ஒரு மூதாட்டி வந்து கதவைத் திறந்தாள்.

தபால்காரன்:—பொன்னுசாமிப் பிள்ளை யிருக்கிறாரா?

வேலைக்காரி:—அவர் இல்லை. கடிதங்க ளிருந்தால் என்னிடம் கொடுத்து விட்டுப் போம்.

தபால்:—அவருக்கு இப்போது கடிதம் ஒன்றுமில்லை. ஆனல் ஒரு கடிதத்தைப்பற்றி அவரை விசாரிக்க வேண்டும்.

கிழவி:—"அவர்தான் வீட்டில் இல்லை. என்று கூறினேனே" என்றதும் கதவை மூடிக்கொண்டு செல்ல முயன்றாள்.

அதற்குள் தபாற்காரன் "அவர் இல்லாவிட்டால் அவர் மனைவி யிருந்தாலும் போதும். இக்கடிதத்தைப் பற்றி விசாரித்துக்கொள்ளலாகும். நான் நாள் முழுதும் இதற்காகக் காத்திருக்க முடியாது. வீணய்க் காத்துக் கொண் டிருப்பதற்காக எனக்குச் சம்பளம் கொடுக்கப் படுவதில்லை" என்றான்.

கிழவி, "சற்றுநேரம் இரும் இதோவருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று சற்றுநேரத்திற்குள் திரும்பிவந்து "வாரும்" என்று அவனை யழைத்துச் சென்றாள். அவன் மிக்க அழகான படிக்கட்டுகளின் வழியாய் மேல் மாடியிலுள்ள ஒரு அறைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டான். அந்த அறை மிக்க அழகாக அலங்காரம் செய்யப் பட்டது. கிழவி யவனை யவ்வறைக்குள் விட்டுச் சென்றாள்.

உள்ளே சென்றதும், மிக்க ஆச்சரியமான வனப்புடைய ஒரு மாது அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

அம்மாது அவனைக் கண்டதும் உற்றுநோக்கினாள். தபால்காரன் தங்கள் தேசாசாரப்படி அவளுக்கு வந்தன மளித்து "அம்மா! நான் தொந்திரை யளிப்பதற்கு மன்னிக்கக் கோருகிறேன். வாசுதேவப் பிரபுவிற்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது அவர் இப்போதிங்கில்லைபோல் காண்கிறது. ஆனால் அக்கடிதம் மிக்க முக்கியமானதால் அவர் இருக்குமிடத்திற்கு அனுப்பப்படவேண்டுமென்று அக்கடிதத்தின் மேல் கோரிக்கொள்ளப்பட் டிருக்கிறது.

பத்மாட்சி:—அக்கடிதத்தை யென்னிடம் அளித்து விட்டுப்போம். நான் அவர் இருக்குமிடத்திற்கு அதை யனுப்பி விடுகிறேன்.

தபால்:—அந்தோ அப்படிச் செய்யமுடியாதம்மா—தயவு செய்து மன்னியுங்கள். இப்போதிருக்கும் தபால் இலாகாவின் உத்தரவு அவ்வளவு கடினமாயிருக்கிறது. கடிதத்தை யென்கையிலிருந்து அன்னியரிடம் நான் கொடுக்கலாகாது.

பத்மாட்சி இதைப்பற்றி யென்ன செய்யலாமென்று தனக்குள் சிந்திப்பவள்போல் "அது முக்கியமான கடிதம் என்று அதன்மேல் குறிப்பிட்டிருப்பதாகக் கூறினீரல்லவா" என்றாள்.

தபால்:—"ஆம் அம்மா" என்று தன் கையிலுள்ள ஒரு கடிதத்தின் விலாசத்தைப் பார்த்துக்கொண்டே "மிக்க முக்கியமானது.'ஜரூர். ஜரூர்' என்றிருக்கிறது" என்று ஆலசியமாய் நிற்கமுடியாதவன்போல் கூறினான்.

பத்மாட்சி ஏதோ தனக்குள் ஒரு யோசனை யுதித்தவள்போல், தபால்காரனை நோக்கி,

"நான் அவருடைய மேல்விலாசத்தை யுனக்களிக்கக் கூடுமென்று நினைக்கிறேன். அந்த விலாசம் என் கணவரிடம் இருக்கவேண்டுமென்றே கருதுகிறேன். அவர் இப்போது வீட்டிலில்லை. ஆயினும் அவர் கைப் பெட்டியில் இருக்கிறதாவென்று பார்க்கிறேன். சற்றுநேரம் பொறும். இதோவந்துவிட்டேன்" என்றாள்.

தபால்:—"அப்படியே ஆகட்டும்" என்றான்.

பத்மாட்சி யுடனே எழுந்து உள்ளே சென்றாள். சற்று நேரத்திற்குள் அவள்திரும்பிவந்ததும் தபால்காரனிடம் ஒரு கடிதத்துண்டை யளித்து "இதோ அந்தப் பிரபுவின் மேல் விலாசம். இது என் கணவன் கடைசிதரம் அவரைச்சந்தித்த போது தம் கையால் எழுதிக்கொண்டு வந்தது. ஆகையால் இது உண்மையானதே யென்பதில் நீர் சற்றும் அய்யம் கொள்ளவேண்டாம்" என்றாள்.

தபால்காரன் அதைவாங்கி வாசித்துப் பார்த்துக் கொண்டு "மிக்க வந்தனம் அம்மா. தங்களுக்கு அனுவசியமான தொந்திரை கொடுத்துவிட்டேன். நான் இதன் நகலை யெடுத்துக்கொள்ளலாமல்லவா? அல்லது இதையே வைத்துக்கொள்ளலாமா" என்றான்.

அம்மாது.—"இதையே வைத்துக்கொள்ளும். ஒரு சமயம் என் கணவனுக்கு இவ்விலாசம் வேண்டி யிருக்குமென்றெண்ணி நான் என் கைப்பட ஒரு நகல் எழுதி வைத்துக்கொண்டுதான் இதை யுமக்களித்தேன்" என்றாள்.

தபாற்காரன் அவ் விலாசத் துண்டை மடியில் வைத்துக்கொண்டு அம்மாதுக்கு வந்தனமளித்துச் சென்றான்.

* * * * *

* * * *

அன்று இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். அச்சமயம் நகர உத்தியான வனத்தின் வடக்கு மூலையில் ஒரு இரட்டைக் குதிரை வண்டி காத்துக்கொண்டிருக்கிறது. அவ்வண்டியின் மேல் எவ்விதமான பட்டச்சின்னங்களுமில்லை. அது சாதாரண அந்தஸ்திலுள்ளோர் வண்டியைப்போலிருந்தது. ஆனால் நல்ல நாணயமான உடையணிந்த இரண்டு ஆட்கார்கள் மட்டும் வண்டியின் பின்னால் நின்று கொண்டு ஆவலோடு யாருக்காகவோ எதிர்பார்த்துக்கொண் டிருப்பவர்கள் போல் அடிக்கடி நான்கு புறங்களிலும் நோக்கிய வண்ணமாயிருந்தார்கள்.

சுமார் அரைமணி நேரம் கழித்து நெடுக முக்காடணிந்த ஒரு உருவம் வண்டியை நோக்கி வந்தது. ஆட்கள் அதைக்கண்டதும் உடனே வண்டியின் கதவைத் திறந்து, விட்டு அவ்வுருவத்திற்கு வந்தனமளித்து ஒதுங்கி நின்று, "அம்மா! இளவரசர் தங்களுக்குத் தமது மரியாதையைக் கூறி தங்கள் தரிசனம் கிடைக்கும் பெரும்பாக்கியத்தை மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாக கூறச் சொன்னார்'' என்றார்கள்.

வந்த சீமாட்டி யுடனே வண்டியில் ஏறிக் கொண்டாள். தட்சணம் வண்டியின் கதவு மூடப்பட்டதும் வண்டி துரிதமாய்ப் புறப்பட்டது. அம்மாது வண்டிக்குள் உட்கார்ந்ததும்,

"ஓகோ! ஏதோ சதி நடக்கிறது. அற்ப புத்தி யுடைய இளவரசன், நாம் அவனுடைய காதலுக்கிணங்கியதைப் பெரிய வெற்றியாக மதித்துக் கொண்டு தன் நண்பர்களில் எவனுக்கோ மிக்க டம்பத்தோடு பெருமையாய்க் கூறிக் கொண்டிருக்கிறான். அந்த சிநேகன் தனக்குத் தெரிந்த சங்கதியை யனுகூலமாகக்கொண்டு இப்போது நமக்கு இச்சதி

செய்கிறான். ஆயினும் இது எப்படிநடக்கிறதோ அப்படியே விட்டுப்பார்ப்போம்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு தைரியத்தை விடாமலே யிருந்தாள்.

வண்டி பலவீதிகளைக் கடந்து சென்றது. ஆனால் அது இளவரசனுடைய அரண்மனைக்குச் செல்லும் பாதை வழி யாய்ப்போகவில்லை. வண்டியிலிருக்கும் மாதுக்கு அச்சங்கதி நன்றாய்த்தெரியுமாயினும் அவள் ஒன்றையும்தெரிந்துகொள் ளாதவள்போல் சற்றும்கலவரமாவது சந்தேகமாவது கொள் ளாதவள்போலவுமே பேசாமலிருந்தாள். ஆனால் இருட்டா யிருந்ததால் அச்சமயம் அவள் முகத்தில் உண்டான கடுங் கோபமும் வெறுப்புமான குறியை யாரும் காணக் கூட வில்லை. ஆயினும் யாரேனும் சற்று கவனித்துப் பார்த்தால் அந்த இருளிலும் அவள் கண்களி லுண்டான கோபத்தண லின் ஜொலிப்பை மட்டும் காணலாகும்.

கடைசியில் வண்டி சுகசிங்கம் பிரபுவின் உன்னதமான மாளிகைக்குள் பிரவேசித்தது. வண்டிக்குள் இருந்த மாது "ஆ! அப்படித்தான் கருதினேன். வஞ்சகனாகிய கள்ளத் துஷ்டப் பயல். இருக்கட்டும்" என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.

வண்டி உள்வாயிற்படி யண்டை நின்றதும் மிக உயர் தரமான உடைகளையணிந்த இரண்டு காலாட்கள் வந்து வண் டியின் கதவைத் திறந்து அம்மாதை யொரு விசாலமான அழகிய கூடத்திற் கழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த இன்னொரு காவலன் அவளை யழைத்துக்கொண்டு விலை யுயர்ந்த இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டிருக்கும் படிகளின் வழியாய் மேல் மாடிக் கழைத்துச் சென்று அங்குள்ள ஒரு அறைக்குள் விட்டு விட்டுக் கதவைச் சும்மா மூடிக்கொண்டு சென்றான்.

அந்த அறை மிக்க அலங்காரமாய்ச் சோடிக்கப்பட்டிருந்தது. சுவர்களில் நாற்புறமும் தங்கச் சரிகையால் அழகிய சித்திர வேலைகள் செய்யப்பட்ட இரோஜா நிறப் பட்டுத் திரைச்சீலைகள் விடப்பட்டிருந்தன. அங்கிருந்த சோபாக்கள் நாற்காலிகள் மேஜைகள் பூந்தொட்டிகள் முதலிய யாவும் மிக்க விலையுயர்ந்தவைகளே.

இதுகாறும் இவ்வாறு வந்த அம்மாது நமது மதனவல்லியே யென்று நமது நேயர்கள் அறிந்துகொண்டிருப்பீர்களென்றே நம்புகிறோம். மதனவல்லி அங்கிருந்த ஒரு சோபாவில் அமர்ந்தாள். வெள்ளி நிலைகளில் வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்திகள் மிக்க பிரகாசத்தோடு எரிந்துகொண்டிருக்கின்றன.

---

38 - வது அத்தியாயம்.

நமது மதனவல்லியின் அழகு மிக்க அபூர்வமானது. எவ்வகைப்பட்ட அழகிற்கும் அது பின்னிடைவதல்ல. அவள் அந்தத் தீபப் பிரகாசத்தில் உயர்தரப் பட்டினுல் அமைக்கப்பட்ட மெத்தைகளை யுடைய சோபாவில் அமர்ந்திருக்கும்போது, ஒரு தேவமாதே அங்கு விஜயம் செய்திருப்பதுபோல் தோன்றியது.

வேருெரு கன்னிகையா யிருந்தால், அவள் எத்தகைய வனப்புடையவளா யிருப்பினும், அச்சமயம் அவள் அடைந்திருக்க வேண்டிய திகிலாலும், நடுக்கத்தாலும், பீதியாலும், துயரத்தாலும் அவள் முகத்தில் சொல்லொணு விகாரம் உண்டாகி, அவ்விகாரம் அவள் வனப்பனைத்தையும் அடியோடழித்துவிட் டிருக்கும். எப்படி யெனில், முன்னுள் பிற்பகல் இளவரசன் அவள் வளவிற்கு வந்து எப்படியோ

அவளைத் தன்காதலுக்கு இணங்கச்செய்து, தான் மறுநாள் இரவு ஒன்பதுமணிக்கு நகர உத்தியான வனத்தண்டைத் தன் வண்டியை யனுப்புவதாகவும் அது அவளைத் தன் அரண்மனைக்குக் கொண்டு வரும் என்று ஏற்பாடு செய்திருந்தான். அப்படியிருக்க இப்போதோ இடையில் பெரிய சதி நடந்து வேறொருவன் தன் கற்பை யழிக்கும் எண்ணத்தோடு அவன் வீட்டிற்குத் தன்னைக் கொண்டுவந்திருக்கிறான். அப்படியிருந்தும் அவள் மனதில் சற்றேனும் பயமாவது கலவரமாவது இன்றி, இனி நடக்கும் வேடிக்கையைப் பார்ப்போம் என்று, தன் மேல் உடையைக் கழற்றி ஒரு நாற்காலியின் மேல் போட்டு விட்டு அறையின் நாற்புறங்களையும் நோக்கிக் கொண்டு இருந்தாள். அச்சமயம் அவள் வனப்பு மிக்க வசீகரத்தோடு பிரகாசித்தது. அந்த நிலைமையில் எத்தகைய ஆடவன் அவளைப் பார்த்தாலும் அவள் காதலைப்பெறத் தன் பிராணனைக் கொடுக்கவும் சந்தோஷமாய் உடன்படுவான்.

அவள் அங்குவந்து உட்கார்ந்த சற்றுநேரத்திற்கெல்லாம் அந்தப் பெரிய அறையில், தான்வந்த வாசற்படியன்றி வேறொரு வாசற்படியிருப்பதையும் அதன் கதவு கொஞ்சம் திறந்திருப்பதையும் கண்டாள். சிந்தித்துப் பார்த்தபோது தான் அந்த அறைக்குள் வந்தபோது அக்கதவு அவ்வாறு திறக்கப்பட் டிருக்கவில்லையென்று தெரிந்தது. அப்படியாயின், அதன் வழியாய் யாரோ நம்மைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்; அதாவது ஏதோ சூதும் வஞ்சகமுமான விவகாரம் நடைபெறுகிறது என்று அவள் மனதிற்பட்டது. ஆயினும் அவள் பொறுமையோடு நடக்கிறது நடக்கட்டுமென்று இருந்தாளேயன்றி, மனக்கலக்கமாவது திகிலாவது பயமாவது அடையவுமில்லை, அக்கதவைத்திறந்து, நம்மை யார் அப்படிப் பார்ப்பதென் றறிவோ

மென்று எழுந்துபோய்ப் பார்க்க ஆவல் கொள்ளவுமில்லை. பூரணசாந்தத்தோடு ஒரு கலக்கமு மில்லாதவள்போல் உட்கார்ந்திருந்தாள்.

இவ்வாறு மதனவல்லி சுமார் கால்மணிநேரம் வரையில் இருந்தாள். ஒருவரும் தன்னிடம் வரவில்லை. இன்னும் சற்றுநேரம் பார்த்தும் கேள்விமுறையில்லை. அதற்குமேலும் பொறுத்துக்கொண் டிருக்க மனந்தாளாமல், ஆசனத்தை விட் டெழுந்துபோய் ஆட்களைக் கூப்பிட மணியடிக்கும் கயிற்றைப் பிடித்து பலமாய் இழுத்துவிட்டு, சங்கதியென்ன வென்று கேட்க யாராவது வேலைக்காரர் வருவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டு நின்றாள். ஒருவரும் வரவில்லை.

அவள் மனதில் வருத்தமும் கோபமும் உண்டாயின. இரண்டாம் முறை மறுபடிப் பின்னும் பலமாய்க் கயிற்றைப் பிடித்திழுத்தாள். அப்போதும் ஒருவரும் வரவில்லை. அவள் முகம் கோபத்தால் இரத்தமயமாய்விட்டது. உதடுகள் படபடத்தன. கண்களில் அக்னிச்சுவாலை வீசியது. மனதில் வெறுப்பும் கோபமும் பொறுக்க முடியாதனவாய் விட்டனவேயன்றி, அப்போதேனும், பயம் திகில் முதலியவொன்றும் உண்டாகவில்லை. மூன்றாம் முறை மணி யடிக்கலாமெனில் அது அகௌரவமாய் அவள் புத்திக்குத் தோன்றியது. தான் மிக்க அவமரியாதையாய் நடத்தப் பட்டதாய்க்கருதி, இன்னமும் இங்கு காத்துக்கொண்டிருப்பது சற்றும் மரியாதையல்ல ஆகையால் இந்த விநாடியே இந்த வீட்டைவிட்டு வெளிப்படுவதுதான் ஒழுங்கான நடக்கையென்று தீர்மானித்துக்கொண்டாள்.

அவள் அவ்வாறே தட்சணம் எழுந்து தன் மேல் உடையை யெடுத் தணிந்துகொள்ள எழுந்திருக்கப்போகும் சமயம் திடீலென்று அவள் மனதில் ஒருயோசனை தோன்றி

யது. உடனே கொஞ்சம் வியாகூலத்தோடும் திகிலோடும் ஆசனத்தில் சாய்ந்தாள். அந்த யோசனையானது, ஒருசமயம் சதிசெய்யக் கருதியவர்கள் நம்மைத் தற்சமயம் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்களோ வென்பதே. ஆகையால் தன் உடையை யெடாமலே எழுந்துசென்று தான்வந்த வாசற்படியிலுள்ள கதவைத் திறக்க முயன்றாள். அது வெளிப்பக்கம் பூட்டப்பட் டிருந்தது. அதை யறிந்ததே "ஓகோ நாம் கொண்ட சந்தேகம் சரியே" யென்று உணர்ந்தாள். ஆயினும் சற்றும் மனக்கலக்கமடையாமல் மிக்க வெறுப்பைக் காட்டும் புன்னகையோடு திரும்பிவந்து தன் ஆசனத்தில் பழையபடி உட்கார்ந்துகொண்டாள்.

சற்றுநேரம் உட்கார்ந்தபின் அங்கு கொஞ்சம் திறந்திருந்த அக்கதவின்மேல் தற்செயலாய் அவள் நாட்டம் விழுந்தது அதைப் பார்த்தபடி யிருந்தபின், அவ்வழி யெங்குதான் செல்கின்றதென்று பார்ப்போம் என்ற ஒரு ஆவல் அவள் மனதில் உதித்தது.

அவள் அவ்வாறே யெழுந்துபோய் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்து அங்கு தீபவெளிச்சம் இருப்பதைக்கண்டு அவ்வறைக்குள் பிரவேசித்தாள். அது மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறு அறை. அதன் சுவர்களின் ஓரத்தில் நாற்புறமும் மிக்க அழகான ஆசனங்களும், நறுமணம் பொருந்திய புஷ்பத்தொட்டிகளும் இருந்தன.

அந்த அறையிலும் வேறொரு வாசற்படி யிருந்தது. அதுவும் கொஞ்சம் திறந்தே வைக்கப்பட்டிருந்தது. அதற்குள்ளும் தீபம் பிரகாசமாய் எரிந்துகொண் டிருந்ததால் மதனவல்லி உள்ளே சென்றாள். இந்த இரண்டாவதறை முன் பார்த்த அறையைவிடச் சிறியதாயிருந்தது. ஆனல் மிக்க அலங்காரம் செய்யப்பட் டிருந்தது. இதில் சோபாக்க

னில்லே. ஆனல் மிக்க விலையுயர்ந்த பெரிய சாய்ப்பு நாற்காலி கள் நான்கு போடப்பட் டிருந்தன அறையின் மத்தியில் ஒரு மேஜைமேல் உயர்ந்த பட்டுச்சால்வை விரிக்கப்பட்டு அதன்மேல் பொன் தட்டுகளிலும் வெள்ளிப் பாத்திரங் களிலும், பலவகைப் பழங்களும், பலகாரங்களும், பான வகைகளும் வைக்கப்பட் டிருந்தன. அங்கிருந்த பெரிய நாற்காலிகளின்மேல் மிகத்தடிப்பும் மிருதுவுமான பட்டு மெத்தைகள் தைக்கப்பட்டிருந்தன. அங்கு எரிந்துகொண் டிருந்த பிரகாசம் பொருந்திய தீபவொளியில் அந்த அறை மிக்க வசிகரமாய்த் தோன்றியது.

அந்த அறையிலும் உள்ளறை யொன் றிருப்பதாய்த் தெரிந்தது. மதனவல்லி இறுகாறும் அங்கு ஒரு மனிதரை யும் காணுததால் அங்கிருந்த கதவையும் திறந்து அந்த மூன் ருவ தறைக்குள் சென்ருள். அங்கு எரிந்துகொண்டிருந்த தீபம் மிக்க குளிர்ச்சியான பிரகாசத்தை யளித்துக்கொண் டிருந்தது. அந்த அறையும் மிக்க நேர்த்தியாகவே அலங் காரம் செய்யப்பட் டிருந்தாலும் அங்கு அனேகம் படங் களும் உருவச்சிலைகளுமே யிருந்தன. தன்னை இங்கு கொண்டுவரச்செய்து இதுகாறும் ஒருவரும் வாவேற்காமல் இருப்பதற்கும், வெளியறை பூட்டப்பட் டிருப்பதற்கும் மதனவல்லிக்கு மிக்க கோபமும் வெறுப்பு முண்டாயிருந் தது. அங்குள்ள விஷயங்களைக் காணக்காணக் கொஞ்சங் கொஞ்சமாய் அவள் கோபமும் வெறுப்பும் கரைந்துபோய் அவற்றிற்குப் பதில், மிக்க வியப்பும் ஆவலும் உண்டாயின.

அவள் முதலில் அங்கிருந்த மூன்று பெரிய வெள்ளைக் கற்சிலைகளை நோக்கினுள். அவை உயிருள்ள மனிதர் அளவே யிருந்தன. அவற்றில் அமைந்துள்ள சிற்ப சாமார்த் தியத்தைக் கண்டு வியப்புற்ற மதனவல்லி சற்று உன்னிப்

பாய் அவற்றின் முகச்சாயல் முதலியவற்றைக் கவனிக்கத் தொடங்கினுள். சற்றுநேரம் பார்த்தபோது அவள் மனதில் மெதுவாய் ஒரு அபிப்பிராய முதிர்ந்தது. அதாவது அவ்வுருவங்கள் அழகை நன்கு விளக்கிக் காட்டிக்கொண் டிருக்கும் வண்ணம் செய்யப்பட்டனவாகவே முதலில் தோன்றினும் அவற்றின் முகச்சாயலால் ஒருவிதச் சிற்றின்ப நோக்கம் அவற்றில் அமைந்திருப்பதாக அவள் புத்தியிற்பட்டது.

அவற்றை விட்டுவிட்டு இன்னொரு கூட்டமான சிலைகளருகிற் சென்று பார்த்தாள். அவற்றிலும் சிற்பவேலை ஆச்சரியமாகவும் யாவரும் மெச்சத்தகுந்தவிதமாகவே யிருந்தது. ஆனல் இந்த உருவங்களில் சிற்றின்பநாட்டம் இன்னும் நன்ருய்ப் புலப்பட்டன. அதாவது காண்போர்க்குச் சிற்றின்ப நினைப்பை யூட்டத்தக்க உருவங்கள்போல் தோன்றின. இப்போது அத்தகைய உருவங்கள் யோக்கியதையுடையவர்கள் வீட்டில் வைக்கப்பட் டிருப்பதானல் அவற்றின் உண்மை யறியாமலே அவை யங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது வேணுமென்று ஒரு நோக்கத்தைக் கொண்டே வைக்கப்பட் டிருக்கின்றனவா என்று அவற்றைக்காண்போர் சிந்திக்கநேர்கிறது. இதன் உண்மை போகப் போகத் தானே வெளியாகுமாதலால் நாம் அதைப் பற்றி யோசிக்கவேண்டியதில்லை.

மதனவல்லி யவற்றைவிட்டு அப்புறமிருந்த இரண்டுருவங்களைப் பார்த்தாள். அவை மன்மதனும் இரதியும். அவ்வுருவங்களின் முகங்களில் காதலின் தீயானது ஜொலித்தெழும்புவதுபோலவே தோன்றியது. ஆயினும் அவ்வுருவங்கள் சிற்ப சாத்திரத்தின் நுட்பத்தையும், சிற்பியின் அதியற்புத சாமார்த்தியத்தையும் வெளியிடுகின்றவைபோல் தோன்றினவேயன்றி கற்புடைய மாதர் காணின் வெறுக்கத்தக்கதென்று கருதக் கூடியதாயில்லை.

மதனவல்லி யவற்றை விட்டு இன்னொரு பக்கத்தி லிருந்த ஒரு ஜதைச் சிலைகளினருகிற் சென்று அவற்றை நோக்கினாள். அவ்வுருவங்கள் ஒரு ஆற்றில் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்து தடாலென்று கரைக்கு ஏறிவரும் ஒரு தெய்வ கன்னிகையை ஒரு கந்தருவ ஆடவன் தாவிப் பற்று வதுபோல் செய்யப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டதே. மதனவல்லி திடுக்கிட்டு மிக்க வெட்கமும் வெறுப்புமடைந்து சட்டென்று அந்த விடத்தைவிட்டுப் பின்னிடைந்தாள்.

அவள் உடனே அந்த அறையையே விட்டு வந்த வழியே திரும்பிச் செல்லும் உத்தேசத்தோடு கதவை நோக் கிச் சென்றாள். அச்சமயம் தற்செயலாய் அங்கு சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு படத்தைக் கண்டாள். அப்ப டம் முற்காலத்தில் மிக்க பிரக்கியாதி பெற்றிருந்த சித் திரக்காரன் ஒருவனால் எழுதப்பட்டது. அவனுடைய படங் களை எல்லா அரசர்களின் அரண்மனைகளிலும் காணலா மென்றால் அச்சித்திரக்காரனுடைய சாமார்த்தியம் எத்தகை யதென இதைவாசிப்போரே உணர்ந்து கொள்ளலாகும். மதனவல்லி அழகிய படங்களில் மிக்க விருப்பமுடையவ ளாதலால் அதன் அருகிற் சென்று அதை நோக்கினாள். அப்படத்தின் காட்சி மிக்க கோரமாகவும் சற்றும் நாணய மற்றதாகவும் மாதர் மட்டு மல்ல யோக்யரான ஆடவரும் பார்க்கத் தகாததாகவும் இருந்தது. ஆகையால் மதனவல்லி யதைக் கண்டதும் முகத்தில் குபீல் என்ற இரத்தம் ஏறக் கண்கள் சிவப்பெய்தி, மிக்க கோபமும் வெறுப்பு மடைந்து அதிவேகமாய் திரும்பி ஆகாரங்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் ஓடி ஆயாசத்தோடு அங்கிருந்த பெரிய சாய்ப்பு நாற்காலிகளில் ஒன்றில் விசையோடு உட்கார்ந்தாள்.

அதே நிமிடம் எங்கிருந்தோ ஒரு எந்திரம் இயங்க ஆரம்பிப்பதுபோல் க்ளிக் க்ளிக் என்ற சத்தம் கேட்டதும்

நாற்காலியின் அடிப்புறம் மறைந்திருந்த இரண்டு வளையங்கள் மேலுக்கு வந்ததும் அவளுடைய இரண்டு கணுக்கைகளும் நாற்காலியில் கரங்களோடு சேர்ந்து விலங்கிட்டது போல் பிணித்து விட்டன. அவள் திடுக்கிட்டு எழுந்திருக்க முயல்வதற்குள் வேறு இரண்டு வளையங்கள் அவ்வாறே கிளம்பி அவளுடைய இரண்டு புயங்களையும் பிணித்து விட்டன. அவள் வீறிட்டலறித் தன்னால் கூடியவரை முயன்றும் தன்னை விடுவித்துக் கொள்ளச் சற்றேனும் முடியவில்லை. தான் சிறையாக்கப் பட்டிருப்பதை அவள் முன்னமே யறிவாள். இப்போது தன் தேகமே சுயாதீனமற்றுத் தன்னைக் காத்துக் கொள்ளவும் சக்தியற்றவளாய் விட்டாள்.

அவள் அவ்வாறு சிக்கிக்கொண்ட சற்று நேரத்திற்குள், இது வரையில் அவள் கண்களுக்கே புலப்படாமல், அங்குள்ள ஒரு சுவரில் அமைக்கப் பட்டிருந்த ஒரு கள்ளக் கதவு திடீலென்று திறக்கப்பட்டதும் சுகசிங்கம் பிரபு அவள் எதிரில் வந்து நின்றான்.

அவனைக் கண்ட மதனவல்லி தன் வெறுப்பையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு, கொஞ்சம் கோபம் காட்டுபவள்போல், "ஓ பிரபுவே, தாங்கள் மதனவல்லியின் காதலைக் கைக்கொள்ள வேண்டிய முறை நான் இன்றுகையால் இங்கோமட்டும் வரவில்லையே யென்று வலியத் தங்கள் வீட்டிற்கு வந்த என்னைத் தாங்கள் இம்மாதிரி நடத்துவது சற்றேனும் ஒழுங்காகுமா? நியாயமாகுமா? மரியாதையாகுமா? தாங்களே கூறினால் எனக்குத் திருப்தியே" என்றாள்.

பிரபு உள்ளத்தில் சந்தோஷ மடைந்ததோடு மிக்க வியப்பு மடைந்து, "ஓகோ! அப்படியாயின் உன் அதிசயமான வனப்பைக் கேட்டு மயங்கி யுன்மேல் காதல்

கொண்ட ஆறு சிநேகிதர்களாகிய எங்களுக்குள் நடந்த ஒப்பந்தமும், முறைநாட்களும், அதன்படி இன்று நான் ஜெயிக்கப்போகிற பந்தயமும் யாவும் உனக்குத் தெரிந்தே யிருக்கிறது!'' என்றான்.

மதன:—"ஆம் பிரபுவே. எனக்கு எல்லாம் ஆதியோடந்தமாய்த் தெரியும். அதுமட்டுமல்ல. நான் நகர உத்தியான வனத்தில் வண்டியில் ஏறும்போதே அது தங்கள் வண்டியென்றும் நான் தங்கள் மாளிகைக்குத்தான் வரப்போகிறேன் என்றும் நன்றாயறிந்து என் மனப்பிரியத்தின் மேல் வந்தேனே யன்றி வேறில்லை. ஆனால் நான் எதிர் பார்த்தபடித் தாங்கள் நான் வந்தவுடனே எனக்கு நல்வரவு கூறாததால் கோபமடைய வேண்டியதாயிற்று'' என்றாள்.

அவள் மிக்க கோபத்தோடும் வெறுப்போடும் தன்னைத் தூஷிப்பாள் என்று எண்ணியிருந்த பிரபு, அவள் அவ்வளவு சாந்தமாயும் பிரியமாயும் பேசுவதைக் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து, "நாங்கள் இரகசியமாய்ச் செய்துக் கொண்ட ஏற்பாடுகளும் ஒப்பந்தங்களும் உனக்கெப்படி தெரிந்தது? யார் உனக்கு அவற்றை வெளியிட்டது?'' என்று கேட்டான்.

மதனவல்லி "புதவாரம் மாலை கர்னல் மாரப்பன் என்பவர் எனக்கு இச்சங்கதிகள் யாவும் கூறினார்'' என்றாள்.

பிரபு:—ஆயினும் நீ இளவரசனுடைய காதலுக்கு இணங்கிவிட்டதாய் ஒப்புக்கொண்டு அவருடைய அரண்மனைக்குச் செல்லத்தானே யிருந்தாய்?

மதனவல்லி உடனே சற்றும் தடுமாற்றமடையாது கலவரம் இல்லாமல், "ஆம் உண்மையே. அதிற்சந்தேகமில்லை.

ஆனால் நான் வண்டியருகில் வந்தவுடனே உமது வேலை யாளால் என்னை யேமாற்றுவதற்காகக் கூறியவார்த்தை களைக் கேட்டதே நான் நடந்த சங்கதி யாவும் நேரில் இருந்து கண்டு கேட்டது போல் தெரிந்து கொண்டேன். அதாவது, இளவரசர் வீண் பெருமையை நாடித் தானே ஜெயமடைந்ததாய்த் தங்களிடம் தற்புகழ்ச்சி செய்து கொண்டதோடு முட்டாள் தனமாய் நான் உத்தியான வனத்தருகில் வரும்படி செய்து கொண்ட ஏற்பாட்டையும் கூறிவிட்டார். தாங்கள் அந்தச் சங்கதியைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டீர்கள் என்று தெரிந்துகொண் டேன். அதே சமயம் உங்களுக்குள் நடந்த ஏற்பாட்டின் படி இன்று என்னிடம் வந்து முயற்சி செய்யவேண்டியது தங்களுடைய முறைநாள் என்பதும் என் நினைவிற்கு வந் தது. உடனே சிந்தித்துப் பார்த்ததில் இவ்வாறு செய்த தற்கு இளவரசரைத் தண்டிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்துக் கொண்டேன். பிரபுவே நான் ஒரு சாதாரண ஸ்திரீயேயாயினும் ஒரு தீர்மானத்தை யெனக்குள் செய்து கொண்டேனாகில் மறுபடி அதனால் என்ன நேர்வதாயினும் சரி அதை நிறைவேற்றாது விடமாட்டேன். மேலும் இத னால் எனக்கு அதிக நஷ்டமென்று நான் கருதவில்லை. ஏனெனில், கௌரவமான ஒரு பட்டத்தையுடைய செல்வப் பிரபு ஏறக்குறைய ஒரு இளவரசனுக்குச் சமானமானவ ரென்றே கருதத்தகும் என்பதே என் அபிப்பிராயம். மேலும் இத்தகைய சந்தர்ப்பத்தில் அடிக்கடி தன் காதலைப் புது மாதர்மேல் மாற்றிப் பழைய காதலியை யடியோடு மறந்து விடும் சுபாவமுடைய ஒரு இளவரசனை விட ஒரு செல்வப் பிரபுவை நம்பித் துணியலாகும் என்று என் மனதிற் பட்டது.

ஆகையால் நான் தட்சணம் என் காதலைத் தங்கள் மேல் மாற்றி விட்டு எதற்கும் ஆலசியம் செய்யலாகாதென்றே அவ்வண்டியில் ஏறி யிங்கு வந்து சேர்ந்தேன். தங்களுக்கு இது பிரிய மில்லாவிடின் ஒரு வினுடி கூட ஆலசியம் செய் யாது தட்சணம் என் மனைக்கு என்னை அனுப்பிவிடும். அனுவசியமாய் எனக்கு அகௌரவம் நேரிடும்படி செய்ய மாட்டீரென்று நம்புகிறேன்" என்ருள்.

நேயர்களே! இம்மொழிகளைக் கேட்டதே பிரபு உள்ளத்தில் மிக்க ஆநந்தமடைந்து "ஆ! எனக்கு மட்டும் உன் அபிப்பிராயம் இவ்வாறிருந்த தென்று முன்னமே தெரிந்திருந்தால், உனக்கு இளவாசன்மேல் இருந்த அபிப்பிராயம் மாறிவிட்டதென்றும் நீ இத்தகைய நோக்கத்தோடு உன் பிரியத்தின் படிக்கே யிங்கு வந்தா யென்று தெரிந்திருந்தால், அந்தோ நீ இங்குவந்து கால்வைத்த நிமிடமே நான் உன் அடிமைபோல் உன் முன் முழங்காற்படியிட்டு உன்னைச் சேவித்துக்கொண் டிருப்பேன். உனக்கு இளவாசன்மே லிருந்த காதலும் அபிப்பிராயமும் இவ்வளவு துரிதத்தில் இப்படி அடியோடு மாறிவிட்ட தென்பதுமட்டும் இன்னமும் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாகவே யிருக்கிறது...." என்று கூறி முடிப்பதற்குள்,

மதனவல்லி:—"பிரபுவே பொறும்பொறும். நான் எதையும் ஒளித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. என்னிடம் அவ்வழக்கமு மில்லை. அந்தக் கர்னல் மாரப்பன் என்பவன் உங்கள் ஏற்பாடுகளைப்பற்றி யென்னிடம் கூறியவுடனே, உங்கள் அறுவரிலும் தலைமையான அந்தஸ்தி லிருப்பது இளவாச ராதலால், அவருக்கே யிணங்குவதென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். ஆனுல் வண்டி யருகில் வந்தவுடனே இச்

சங்கதிக ளனைத்தும் உணர்ந்ததே, இளவரசன் செய்கையால் எனக்கு மிக்க கோபம் உண்டானதோடு அவர் என்னை மிக்க அலட்சியமாகவும் அகௌரவமாகவும் நடத்தியதாகவே யெனக்கு மிக்க வருத்தமுண்டாயிற்று. ஆதலின் அவரைத் தண்டித்தேதீருவதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

பிறகு இருக்கும் ஐவரில் தாங்களே இளவரசனுக்கு இரண்டாவதான உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர் ஆதலால் என் காதலைத் தங்களுக்கே யளிப்பதென்று தீர்மானித்தேன். எனக்கு அப்படிப் பிரிய மில்லாவிடில் தங்கள் வண்டியில் ஏறியே யிருக்கமாட்டேன். ஒருசமயம் தங்கள் வீட்டிற்கு வருவதென்று எனக்கு அச்சமயம் தெரியாதென்றே வைத்துக்கொண்டாலும் எப்போது தங்கள் வீதியில் வண்டி திரும்பியதோ அதே நிமிஷம் வண்டி தங்கள் வீட்டிற்குத்தான் வருகிறதென்று அப்போதே யெனக்குத் தெரியுமல்லவா. நான் உடனே ஒரு கூச்சலிட்டால் வழியில் போகும் ஜனங்கள் எனக்கு உதவி செய்திருப்பார்கள். நான் யாவுமறிந்து உம்மை நம்பியே வந்தேன். தாங்கள் என் விருப்பங்களை யெல்லாம் திருப்தி செய்வீர்களென்றே நம்புகிறேன்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே பிரபு அவள் கூறிய யாவும் மனப்பூர்வமாகக் கூறியவைகளே யென்று பூரணமாய் நம்பிக்கொண்டான். அவன் மனம் அச்சமயம் மேலுலக போகத்தை யனுபவிப்பதுபோ லிருந்தது. இத்தகைய அபூர்வ வனப்புடைய கன்னிகை தன்மேல் காதல்கொண்டாள் என்ற நினைப்பால் அவன் தன்னை ஒரு அரசனிலும் மேலானவனாகவும், மிக்க பாக்கியவானாகவும் மதித்துக்கொண்டான். ஆகையால் மிக்க அன்போடும் பெருமையோடும் அவளை நோக்கி,

186541

"ஆ என் அரிய காதலியே! உன் கோரிக்கைகள் யாவற்றையும் நிறைவேற்றுவதே என்கடமைத்தொழிலாகக் கொள்வேன் என்பது சத்தியம். வருடம் ஒன்றுக்கு ஆரு யிரம் பவுன் ரொக்கமாய் உன் இஷ்டப்படி செலவுசெய்யக் கொடுத்துவிடுகிறேன். அது உன் சொந்த கைச் செல விற்கேயாகும். அதன்றி ஒரு நேர்த்தியானதும், மிக்க அழகாயும், பார்ப்போர் பிரமித்து வியக்கும்படியான வித மாகவும் அலங்காரம் செய்யப்பட்ட ஒரு மாளிகையும் உயர் தரப் புரவிகள் இரண்டு பூட்டப்பட்ட மிக்க அழகான ஒரு வண்டியும், ஏறு குதிரையொன்றும்,வேண்டிய ஆட்காரர்கள் தோழிப் பெண்களும், குடும்பத்திற்கு வேண்டிய பாத்திரங் கள் முதலிய சாமான்களும் யாவும் ஏற்பாடு செய்கிறேன். உனக்கு இஷ்டமான நகைகளை வாங்கி யளிக்கிறேன்" ஆ! உன்னை யிந்நாற்காலியி லிருந்து விடுவித்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே நாற்காலியின் பின்பக்க மிருந்த ஏதோ ஒரு மரையைத் தொட்டான்.

உடனே எந்திரம் திரும்பியது; மதனவல்லி நாற்காலியி லிருந்து விடுவிக்கப் பட்டாள். அவள் மெதுவாய் எழுந்து நாற்காலி யருகிலே நிற்பதற்குள் பிரபு மிக்க ஆவலோடு அவளை யாலிங்கனம் செய்து கொண்டான்.

மதனவல்லி தான் அதற்குச் சந்தோஷமாய் இடங் கொடுப்பவள் போல் இரண்டு நிமிடங்கள் வரை யபினயம் செய்தாள். பிறகு நாணத்தோடு அவனுடைய ஆலிங்கனத்தி லிருந்து தன்னை விடுதலை செய்துகொள்பவள் போல் மெது வாய்த் திமிரிக்கொண்டதும், பிரபு ஓடி எட்டிச் செல்லு முன் அவனைப்பிடித்து துரிதமாய் வேகத்தோடு அதே நாற் காலியில் மல்லாக்கத் தள்ளிவிட்டாள்.

பிரபு இச்செய்கையைச் சற்றும் எதிர்பார்க்க வில்லை. அவர் பிரமை நீங்கி எழுந்திருக்க முயல்வதற்குள் தானே விலங்கில் சிக்கிக் கொண்டார்.

---

39 - வது அத்தியாயம்.

பிரபு அவ்வாறு விலங்கில் சிக்கிக்கொண்டதே மதன வல்லியின் முகமும், வார்த்தைகளும், சுபாவமும் யாவும் அடியோடு மாறிவிட்டன. அவள் அபிநயித்துக் கொண்டிருந்த சாந்தமும், பிரியமும், மரியாதையும் யாவும் ஒருநொடியில், வெறுப்பும், கோபமும், அலட்சியமும் வீரமு மாய் மாறிவிட்டன. அவள் சிவந்தமுகத்தோடும், கண் களில் தீப்பொறி பறக்கும் கோபத்தோடும், மிக்க வெறுப் போடும், ஆத்திரத்தோடும் ஜயமடைந்த உற்சாகத்தோடும் அப்பிரபுவை நோக்கி,

"அட சண்டாளனே! ஆரம்பத்திலிருந்தே நீ மிக்க இழிகுணங்களையுடைய நீசனிலும் மிக்க இழிவான அசேத கன் என்று நான் அறிவேன். அப்படிப்பட்ட அற்பனாகிய நீ, நான் உன்னை யொரு மனிதனாய் மதித்து உன் காத லுக்கு இணங்கிவிடுவேன் என்று எண்ணிய உன் மடத் தனந்தான் எப்படிப்பட்டதோ, உன் கோழை நெஞ்சில் எப் படித்தான் இத்துணிகரம் உண்டாகியதோ? எனக்குப் புலப் படவில்லை. பெண்சிங்கத்தை யொரு சொறிபிடித்த நாய் இச்சிக்கலாகுமோ. உன் மூடமதி யிருந்தவாறென்னையோ. இப்போதும் உன் கபடசிந்தனையையும், மோசச்செயலையும், அக்கிரமநடக்கையையுமே நீ வெளியிட்டாயன்றி வேறில்லை.

இப்போது நீ யடைந்தது சரியான தண்டனையே. ஆனாலும் இது போதாது. இப்போது உன் வீட்டிலுள்ள

வேலைக்காரரையெல்லா மழைத்து உன் யோக்கியதையையும், நீ யடைந்த தண்டனையையும் கூறவேண்டுவதே நியாயம். ஆயினும் அத்தகைய பெரிய அவமானத்திலிருந்து உன்னைக் காப்பாற்றவே நினைக்கிறேன். உன்னை யிந்த ஸ்திதியிலேயே யிருக்கவிட்டுச் செல்லப் போகிறேன். உனக்குச் சந்தர்ப்பம் நேரிடுகிறபடி நீ இந்த விலங்கிலிருந்து விடுதலை யடையவேண்டியதே நியாயம்.

நான் செல்லுமுன் இன்னொரு சங்கதி கூறிவிடவேண்டும். அதாவது நான் இங்கு வருவது தெரிந்தே, மனம் ஒப்பியே வந்ததுமட்டும் உண்மைதான். ஆனால் உன் அயோக்கியமான யோக்கியதைக்கும், வெறுப்பை யுண்டாக்கும் அவலட்சண உருவத்திற்கும் ஆசைப்பட்டு உன்மேல் காதல் கொண்டு வரவில்லை. உன் படுமோசமாகிய அநீத எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள எவ்விதமாய் நீ நடந்து கொள்கிறாய் என்பதை யறிந்து, உன்மேலிருக்கும் வெறுப்பையும், உன்னைப்பற்றி எனக்கிருக்கும் அபிப்பிராயத்தையும், பாழடைந்த உன் அசேதகமான முகத்தின் முன்பே தாராளமாய்க் கூறவேண்டும் என்றே நான் துணிந்து இங்கு வந்தேன்'' என்றாள்.

நேயர்களே! மிக்க அற்பமாகிய சிற்றின்பத்தில் அளவு கடந்த இச்சைவைத்து யோக்கியதையையும் நீதியையும் இழந்து இழிகுணத்தோடு ஒழுகும் அவ்வயோதிகப் பிரபுவின் மனோநிலைமை யிப்போது எவ்வாறிருக்கும் என்பதை நீங்களே சிந்திக்கலாம்.

அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. நெஞ்சுலர்ந்துவிட்டது. பேச நாவெழவில்லை. தான் இக்கன்னிகையின் கருத்தை யறியாமல் அடியோடு மோசம் போனதொன்று. தான் செய்த மிக்க தந்திரமான சாமார்த்திய

மனைத்தும் அடியோடு பயனின்றிப் போய்விட்டதொன்று. அதோடு சற்றுநேரத்திற்கு முன் தான் அவ்வழகிய கன்னிகையைத் தனக் கிணங்கும்படி செய்துகொண்ட தாகவும், அறுவரில் தானே ஜெயமடைந்ததால் பந்தயப்பணத்தைப் பெறப்போவதாகவும் நம்பிய சந்தோஷம் அடியோடு போய்க் கடைசியில் அவமானத்திற்கும் கேலிக்கும் இடமாய்விட்டதேயென்ற துயரம் அவன் மனதை நரகவேதனையி லழுத்திவிட்டது. என்னசெய்வான் பாபம். கோபமும் வெறுப்பும் வஞ்சமும் ஒருபுறம் அவன் மனதைக் கொளுத்தின. அவன் இன்னது கூறுவதென்று தோன்றாமல் இஞ்சிதின்ற மந்திபோல் விழித்தான்.

மதனவல்லி ஒருமுறை மிக்க வெறுப்போடும் அலட்சியத்தோடும் அவனை யுற்றுநோக்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள். ஆனால் முன் அறையின் கதவு பூட்டப்பட்டிருப்பதை நினைத்துக்கொண்டு மறுபடி திரும்பி, பிரபு இருக்கும் அறைக்குச் சென்று, பிரபு வந்தவழியிலுள்ள கள்ளக்கதவைத் தேடினாள்.

அதற்குள் பிரபு பேசச் சக்தியுடையவனாய் "தயவுசெய்து என்னை விடுதலைசெய்துவிடு. நீ தாராளமாய் இங்கிருந்து செல்லலாம்" என்றான். மதனவல்லி தன் வார்த்தைகளை யிலட்சியம் செய்யாததைக் கண்டு "நீ யந்த கள்ளக் கதவைத் திறக்கும் இரகசியத்தை யறிய முடியாது. என்னை இதிலிருந்து விடுதலைசெய்தால்......." என்று பிரபு கூறி முடிப்பதற்குள்,

மதன:—"ஒருகாலும் உன்னை யிப்போது விடுவிக்கமாட்டேன். நீ யிக்கதவைத் திறக்கும் இரகசியத்தைக் கூறுவிட்டால் நான் முன் அறைக்குச் சென்று வீதியின் பக்கமிருக்கும் சாளரத்தைத் திறந்து வீதியில்

செல்லும் ஜனங்களைக் கூவி யழைத்து எல்லா சங்கதி யும் கூறிவிடுவேன். அப்படி யவமானப்படச் சம்மத மாயின் இதைக் கூருமலிரு" என்ருள்.

பிரபு சற்று சிந்தித்துப் பார்த்து "அதைக் கூறிவிடு கிறேன், நீ வெளியில் செல்லும் ஒருவேலைக்காரனை யுடனே யென்னிட மனுப்புவதாய் வாக்களித்தால் உன் வார்த்தை யை நம்புவேன்" என்ருன்.

மதனவல்லி யவ்வாறே சம்மதிக்கப் பிரபு கதவைத் திறக்கும் இரகசியத்தைக் கூறினன். மதனவல்லி சற்றுநேரத் திற்குள் அம்மாளிகையைவிட்டு வெளிப்பட்டாள்.

சுகசிங்கம் பிரபுவின் மாளிகையை விட்டுப் புறப்பட்ட மதனவலலி, உடனே ஒரு வண்டி பேசிக்கொண்டு இளவா சன் அரண்மனைக்குச் சென்ருள்.

அவளைக்கண்ட இளவாசன் மிக்க வியப்பும் சந்தோஷ முமடைந்து, "ஆ! இது என் நல் லதிஷ்டமே. உன் கடி தத்தைக் கண்டு மிக்க விசன மடைந்தேன். அதில் கூறப் பட்ட சங்கதியால் நான் உன்னை யெதிர் பார்க்கவே யில்லை" என்ருன்.

இதைக் கேட்டதே மதனவல்லி "ஓகோ! நாம் எழுதி யது போல் யாரோ கள்ளக்கடிதம் எழுதியிருக்கிருர்களென்று தெரிந்து கொண்டு, நான் தங்களுக்கு ஒரு கடிதமும் எழுத வில்லையே! தங்களால் நான் மிக்க அவமரியாதையாய் நடத்தப்பட்டதன்றி, என் மானத்தையே யிழந்துவிடத் தக்க ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். நான் இங்குவா விருந்த இரகசியத்தைத் தாங்கள் யாவரிடம் கூறினீர்கள்?" என்ருள்.

இளவாசன் உடனே சுகசிங்கம்பிரபுவே யேதோ கபடமாய் நடந்துக்கொண் டிருக்கிருன் என்று அறிந்து,

தனக்குவந்த கடிதத்தை யெடுத்து மதனவல்லியிட மளித்தான். அதில், "எனக்குத் திடீரென்று கொடிய அசௌக்கியம் நேர்ந்ததால் தங்களுக்கு வாக்களித்தபடி யின்று வர முடியாது. கூடிய சீக்கிரத்தில் சுகமடைந்ததே சங்கதி தெரிவிக்கிறேன். இப்படிக்குத் தங்கள் காதலை மறவாத அடிமை மதனவல்லி" என்று எழுதப்பட்டிருந்தது.

இளவரசன் மதனவல்லியை நோக்கி "ஓ என் உயிரினு மினிய காதலியே, இச்சண்டாளனை நான் உண்மையான நண்பனென்று நம்பினேன். இது என் அஜாக்கிரதையால் நடந்ததால் என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் எந்த ஸ்திரீக்கும் இம்மாதிரி கூறியதில்லை. இனித் தயவுசெய்து அப்பிரபுவின் மாளிகையில நடந்த சங்கதி யென்ன? அதை விவரமாய்க் கூறு" என்றான்.

மதனவல்லி நடந்த சங்கதி யாவும் கூறியதைக்கேட்ட இளவரசன் தட்டென்றெழுந்துத் தன் பாதங்களால் பூமியை யுதைத்து, "ஆ! அல்பப்பயல், நான் அவனிடம் கூறியபடி அவனுக்குப் பட்டமளிக்கும் பத்திரத்தை யனுப்பத் தவறிவிட்டதால் இப்படியவன் படுமோசம் செய்திருக்கிறான். ஆயினும் நீ மிக்க சாமார்த்தியமாய்ச் செய்த தண்டனை நேர்த்தியானதே" என்றான்.

மதன:—"அப்பிரபுவை மன்னிக்கக் கொஞ்சம் காரணம் இருக்கிறதென்று நானறிவேன். மேலும் என் காதலைப்பெற முயற்சி செய்வதற்கு உங்கள் அறுவர் ஒப்பந்தப்படி இன்று அவருடைய முறைநாளல்லவா" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே யிளவரசன் ஓகோ! இவள் எப்படியோ எல்லா இரகசியத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறாளென்று உணர்ந்து, மிக்க வியப்படைந்து,

"ஆ இந்த இரகசியம் உனக்குத் தெரிந்திருக்கிறதா ?" என்றான்.

மதன:—எனக்கு எல்லாம் தெரியும்.

இளவ:—யார் உனக்குக் கூறியது? சுகசிங்கம்பிரபுதானே?

மதன:—இல்லை யில்லை, எனக்கு உங்கள் இரகசியம் தெரிந்து விட்டதைப்பற்றித் தாங்கள் எவ்வாறு வியப்படைந்தீர்களோ அப்படியே அப்பிரபுவும் வியப்படைந்தார். கர்னல் மாரப்பன் இந்த இரகசியத்தை யென்னிடம் கூறி விட்டால் என்னைத் தனக்கு இணங்கும்படி செய்துக் கொள்ளலாம் என்று தந்திரம் செய்தான். ஆனால் நான் அவன் யோக்கியதைக்குத் தக்கபடி வெறுப் போடும் அலட்சியத்தோடுமே அவனை நடத்தினேன்.

இளவ:—"ஆ! உன் சாமார்த்தியத்திற்காகவும் புத்திநுட்பத்திற்காகவும் உண்மையாய் உன்னை மெச்சிக்கொள்வதோடு, என் குற்றத்தினால் உனக்கு நேர்ந்த மனவருத்தத்திற்காக உன்னை யொரு தேவகன்னிகைபோலவே மதித்து நடப்பேன். அந்தக் கர்னல் மாரப்பன் என்பவன் இதுமுதல் என் கொடிய விரோதியே" என்றான்.

அதன்பிறகு இருவரும் தங்கள் காதலைப்பற்றிச் சந்தோஷமாய்ச் சற்றுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். பிறகு இளவரசன் மதனவல்லியை இராப்போஜனம் எடுத்துக்கொண்டு சாவகாசமாய்ச் செல்லும்படி வேண்டிக் கொண்டான்.

மதனவல்லி "நான் நெடுநேரத்திற்கு முன்பே இங்கு வாராதது தங்கள் குற்றமே. இப்போதே நெடுநேரமாய் விட்டது. என் கௌரவத்திற்குமட்டும் கெடுதி நேரிடலாகாதென்று முன்னமே கூறியிருக்கிறேன். ஆகையால் நான் இன்னும் வீடுபோய்ச் சேராமல் ஆலசியம் செய்யலாகாது.

இதைக்கருதியே நான் ஏறிவந்த வண்டியைத் திரும்பிப் போகாமல் காத்திருக்கும்படி கட்டளையிட் டிருக்கிறேன்'' என்றாள்.

இளவ:—"ஓ என் காதலியே அப்படியானால் கூடிய சீக்கிரத்தில் நாம் சந்திக்கும்படி அருள்புரியவேண்டும்'' என்றான்.

மதனவல்லி யவ்வாறே வாக்களித்துவிட்டு இளவரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் மனைக்குச் சென்றாள்.

* * * *
* * * *

அன்றிரவு பதினோருமணியிருக்கும். நிலவு நடுவானத்திற் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அந்தவேளையில் ஒரு குதிரை வண்டி ஒரு அடர்ந்த புதரின் அருகாமையிலிருந்து பிரியும் ஒரு சிறு கிளைப்பாதையின் சந்திப்பில் நின்றது. அவ்வண்டியிலிருந்து ஒரு ஆடவனும் ஒருமாதும் கீழிறங்கினர்கள். ஆடவன் சாரதியைநோக்கி வண்டியை யங்கேயே வைத்துக்கொண் டிருக்கும்படி கூறிவிட்டு அம்மாதின் காத்தைப்பற்றி யவளை யழைத்துக்கொண்டு ஒரு சிறு சந்தின் வழியாய்ச் சுமார் கால்மைல் தூரத்திலிருக்கும் வீட்டை நோக்கிச் சென்றான். வண்டியிலிருந் திறங்கிய இருவரும் வாய் பேசவில்லை. இவர்கள் சென்ற வீடு ஒரு பெரிய தோட்டத்தின் மத்தியி லிருக்கிறது. இவர்கள் அதன் தெருப்பக்கமிருக்கும் வழியாய்ச் செல்லாது, பின்பக்கத்து மதில் சுவரிலிருந்த ஒருசிறுவழியில் நுழைந்துசென்றார்கள்.

அம்மனிதன் கொஞ்சம் வயது முதிர்ந்தவன். ஆனால் பார்வைக்குச் சற்று அழகும் கெம்பீரமுமான பெரிய மனிதன்போன்ற தோற்றமுடையவன். அம் மாதோ மிக்க இளம்பிராயமுடைய பூரண அழகுவாய்ந்த கன்னிகை,

அவள் தேகம் நடுக்கமுற்றது. ஆனல் அப்போது குளிர் காலமல்ல. ஆகையால் அந் நடுக்கம், மனநடுக்கத்தாலுண் டானது. அச்சமயம் அவள் மனோநிலைமை யிருந்தவாறு இத்தன்மையதென நம்மால் கூறமுடியாது.

அவர்கள் உள்ளே பிரவேசித்ததும் அங்கிருந்த தோட் டத்தில் சுமார் ஐம்பதுகெஜதூரத்தில் ஒரு தீபவொளி தெரிந் தது. அதைக்கண்டதே யம்மாது வாய் குழறிக்கொண்டே ஆ! அதென்ன தீபம். அங்கே யார் என்ன செய்கிறார்கள்?'' என்றாள்.

அம்மனிதன் கொடூரமான குரலோடு, "அங்கிருப்பது ஒரு மனிதனே. அவன் சவக்குழி தோண்டிக்கொண்டிருக் கிறான்'' என்று கடுகடுப்பாய்க் கூறினான்.

அம்மாது ஆவிசோர்ந்து "சவக்குழியா?'' வென்றாள்.

அம்மனிதன்:—ஆம். நாம் செத்தவனைப் புதைக்கத்தானே இங்கு வந்தோம்? வேறென்ன வேலை யிங்கே? அவ னைப் புதைப்பதென்றால் ஒரு குழி தோண்டித்தானே யாகவேண்டும்.

மாது:—இம்மாதிரி ஏன் குரூரமாய் என்மனம் புண்படும்படி பேசுகிறீர். பின்னால் நடந்த சங்கதிகளால் நீர் என்னை யிப்படி யிம்சிக்க நியாய மிருக்கிறதா?

அம்:—சரி. நமக்குள் சச்சரவுவேண்டாம். பேசாமல் வா. ஓகோ ஏன் பின்னிடைகிறாய். நீ கட்டாயம் வந்தே தீரவேண்டும். இந்த வேலையை யுன்னை நேரில் வைத் துக்கொண்டு நடத்தவேண்டுமென்று நான் பிரமாணம் செய்துக்கொண்டேன். இது என் வேலையல்லவே. நீ செய்தவேலைதானே. இப்போது பின்னிடைந்தால் பத்திரம் நீயும் அக்குழியிலேயே அவனோடு புதைக்கப் படுவாய்.

அம்மாது "ஓ! என்னைக் கொல்லவே துணிந்திருக்கி றீரோ, வேண்டாம் வேண்டாம். நீர் சொல்கிறபடி கேட் கிறேன்" என்று நடுக்கத்தோடு கண்ணீர்விட்டுக்கொண்டே கூறினாள்.

சற்றுநேரத்திற்குள் இருவரும் தீபத்தினருகிற் சென் றார்கள். அங்கு குழி தோண்டிக்கொண்டிருந்த மனிதன் இவர்களைக் கண்டதும் தன் வேலையை நிறுத்திவிட்டு குழி யைவிட்டு வெளியில் வந்துநின்று இவர்கட்கு வந்தன மளித்து நின்றான்.

அம்மாது அவனைக் கண்டதும் மெதுவாய் "அய்யோ கடவுளே! என்ன அகோரமும் பயங்கரமுமான ரூபம்" என் றாள். அவள் கணவனாகிய அம்மனிதன் அவளிடம் குசு குசுவென்று "மூடமே பேசாமலிரு. அவன் மிக்க நல்ல வனே. அவன் கிடைக்காவிட்டால் நான் எப்படி யிவ்வே லையை நிறைவேற்றுவேனோ கடவுளுக்கே அற்புதம்" என்று கூறிவிட்டு, அம்மனிதனை நோக்கி,

"மிக்க கஷ்டப்பட்டாய்போல் காண்கிறது" என்றான்.

அம்மனிதன் "தாங்கள் இது மிக்க ஆழமாயிருக்க வேண்டுமென்கிறீர்களே" என்றான். அம்மனிதன் "ஆம் ஆம். இந்த வீட்டை நான் குத்தகை யெடுத்துக்கொண்ட காலம் இன்னும் இரண்டுவார காலத்தில் முடிந்துவிடுகிறது. பிறகு யாராவது இங்கு வசிக்க வருவார்கள். அப்போது ஏதாவது செடிவைக்க அவர்கள் குழிதோண்டினால் இது வெளிக்கு வந்துவிடலாகாது. இனி நாங்கள் சென்று சவத் தைத் தண்ணீர்த் தொட்டியிலிருந்து வெளியெடுக்கலாமே" என்றான்.

அம்மனி:—"ஆகா செல்லுங்கள். நானும் சீக்கிரத்தில் உங்க ளுக்குத் துணைசெய்ய வந்துவிடுகிறேன்" என்றான்.

புருடன் தன் மனைவியின் காத்தைப்பற்றி யழைத்துக் கொண்டு அங்கிருந்த வீட்டை நோக்கிச்சென்றான். அம்மாதின் மனம் அச்சமயம் இருந்த நிலைமை கடவுளே யறிய வேண்டும். இப்போது தாங்கள்போய் தண்ணீர்த்தொட்டியி லிருந்து வெளியி லெடுக்கப்போகும் சவம் தன் பிராணனைவிடத் தான் அதிகமாய் நேசித்தத் தன் அழகிய காதலனுடையதென்றும், அவனைக் காலியாயிருந்த தண்ணீர்த் தொட்டியில் ஒளிந்துகொள்ளச் செய்து அதன்மேல் மூடியை மூடிவிட்டு அதன்மேல் பாரமான சாமான் பெட்டிகளை வைத்துவிட்டு, திடீலென்று தன் கணவனோடு வீட்டை விட்டு வெளியூருக்கு அவசரமாய் ஓடிப்போகும் சமயத்தில் நேர்ந்த கலவரத்தால் அப்பெட்டிகளை யெடுக்காமலே அறையின் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றதே அவன் இறந்ததற்குக் காரணமென்றும் அவள்மனம் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றால், அவள் நரகவேதனையை நாம் இன்னும் விவரித்துக் கூறவேண்டியதில்லை.

சற்றேனும் ஈவிரக்கமில்லாத அத்துஷ்டன் அவள் தனக்குச் செய்த துரோகத்திற்காக வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றே அவள் கையாலேயே அவள் காதலன் சவத்தை யெடுத்து அடக்கம் செய்யவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டான். நேயர்கள் இதுகாறும் இதன் பூர்வவிருத்தாந்தத்தை யறிந்துகொண்டிருப்பீர்களென்று நம்புகிறோம். ஆகையால் இக்கோரக் காட்சியைச் சுருக்கமாய் முடித்து விடுகிறோம்.

அத்துஷ்டன் வீட்டின் பின்புறக் கதவைத் தன்னிடமிருந்த சாவிகளி லொன்றால் திறந்து உள்ளே நுழைந்து மேல்மாடிக் கேறி அங்கிருந்த குளிக்கும் அறையின் கதவைத் திறந்தான். உடனே அங்கிருந்து சவம் அழுகும்

துர்க்கந்த நாற்றம் வீசியது. இவர்கள் திடீலென்று வீட்டை விட்டு அன்னிய நாட்டிற்குச் சென்றபின் நான்கைந்து நாட்களுக்குள் "தாங்கள் திரும்பிவர நெடுநாட்கள் செல்லுமாதலால் நீங்களெல்லாம் வேறு வேலை பார்த்துக்கொள்ளுங்கள்" என்று தன் வேலைக்காரருக்கு கடிதம் எழுதி ஆளுக்கொரு மாத சம்பளத்தையு மனுப்பிவிட்டான். அதனால் அவர்கள் அங்கிருந்த சொல்பகாலத்தில் அந்த வீட்டில் இருந்த பெரிய பயங்கரமான இரகசியத்தை யவர்களறியச் சமயம் வாய்க்காமற் போய்விட்டது.

அறையைத் திறந்தபின் அத்துஷ்டன் தொட்டியின் மேலிருந்த பெட்டிகளைக் கீழே யிறக்கிவிட்டு அதன் மேல் மூடியைத் திறந்தான், உடனே சகிக்கமுடியாத துர்க்கந்தம் வீசியதோடு, காணும் மாதர் காதல்கொள்ளத் தக்க மிக்க அழகுவாய்ந்த அவ்வாலிப புருடனுடைய முகம் சொல்லொணுக் கோரமான விகாரமடைந்து தோன்றியது. அதைக்கண்டே சகிக்கமுடியாமல் பிராணவஸ்தையை யனுபவித்துக்கொண் டிருக்கும் தன் மனைவியை யிந்தக்கொடிய சண்டாளன் பலவந்தப்படுத்தி, அச்சவத்தை அத்தொட்டியிலிருந்து வெளியிலெடுக்கத் தனக்குத் துணைபுரியும்படி செய்தான். சவம் வெளியிலெடுக்கப்பட்டதும், அம்மாது மனந்தாளாமல் அடுத்த படுக்கை யறையில் மஞ்சத்தின்மேலிருந்த ஒரு போர்வையை யெடுத்துச் சவத்தின்மேல் போர்த்தி அதை மூடிவிட்டாள்.

அதற்குள் சவக்குழி தோண்டிய ஆள் அங்குவர அதன்பின் ஆடவரிருவருமே சவத்தை யெடுத்துப்போய், சவத்தோடு நீர் தொட்டியிலிருந்த நூலேணியால், அதைக் குழியில் விட்டார்கள். அந்த ஆள் மண்ணைத் தள்ளிக் குழியை நிறப்ப முயன்றதே, அம்மலிதன் அவனிடம் ஒரு

சாவியைக் கொடுத்து "மறவாமல் வெளிவாயிற்படிக் கதவைப் பூட்டிக்கொண்டு செல்" என்றான்.

அந்த ஆள் "அப்படியே. மறுபடி நாம் சந்திக்கும்போது சாவியைக் கொடுக்கிறேன்" என்றான். அதன் பிறகு அம்மனிதன் தன் மனைவியை யழைத்துக்கொண்டு சென்று வண்டியில் ஏறினான். உடனே வண்டி துரிதமாய்ச் சென்றது. புருடனும் மனைவியும் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

40-வது அத்தியாயம்

காலை சுமார் பத்துமணி யிருக்கும். அச்சமயம் நமது துப்பறியும் நிபுணனாகிய செல்வநாதன் நாணயமான உடை யணிந்துகொண்டு சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குச் சென்று அவரைக் கண்டான். பிரபுவோ இரவு நடந்த சங்கதிகளால் மிக்க அவமானத்தாலும் கோபத்தாலும் மனமுடைந்து உற்சாகமற்ற நிலைமையி லிருக்கிறார். அச்சமயம் செல்வநாதன் வந்திருக்கிறான் என்பதைக் கேட்டதே அவருக்குச் சற்று மனத்தெளிவும் உற்சாகமும் உண்டாயிற்று. ஏனெனில் அவனுடைய அபூர்வ சாமார்த்தியத்தை நன்குணர்ந்தவரானதால், தாம் அவனிடம் கூறியிருக்கும் மிக்க இரகசியமும் நுட்பமுமான விவகாரத்தில் அவன் ஜெயம்பொருந்தி வந்திருப்பானென்று நினைத்துக் கொண்டார். ஆகையால் உடனே யவனை யுள்ளே யழைத்து வரும்படி ஆவலோடு கட்டளையிட்டார்.

பிரபு அவனைக் கண்டதே "ஆ! செல்வநாதம்! என்ன சமாசாரம்?" என்றார்.

செல்வ:—பிரபுவே! எல்லாம் சந்தோஷ சமாசாரமே. நான் அக்கள்ளரைக் கண்டு பிடித்துவிட்டேன்.

பிரபு:—ஆ! உனக்கிருக்கும் புகழ் உனக்குரியதே. சரி, உட்கார்ந்து சங்கதியைக் கூறு.

செல்வ:—"பிரபுவே! நான் எவ்வாறு கண்டு பிடித்தேன் என்ற விவரத்தைக் கூறட்டுமா. அல்லது முடிவான சங்கதியைக் கூறிவிடட்டுமோ?" என்றான்.

பிரபு—"நீ இதில் ஆரம்பத்தில் எவ்வாறு பிரவேசித்தாய்? எப்படி அக்கள்ளரைக் கண்டு பிடித்தாய்? யாவுமறிய மிக்க விருப்பமாயிருக்கிறது. ஏனெனில் நான் ஒரு துப்பறிபவனுய் இருந்தால், இதில் எப்படி முதல்முதல் வேலைசெய்யத் தொடங்குவது? எந்த அஸ்திவாரத்தைக்கொண்டு என் வேலையைத் தொடங்குவதென்பது எனக்குச் சற்றேனும் விளங்கவே விளங்காது" என்றார்.

அதோடு அச்சமயம் இருந்த அவருடைய மனோ நிலைமையை மாற்ற, ஏதாவது ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடும்படியானதுமான சம்பவங்களைக் கேட்பது அவருக்கு மிக்க அனுகூலமா யிருந்தது. ஆகையால் அத்தகைய சமையத்தில் செல்வநாதன் வந்தது அவருக்கு மிக்க சந்தோஷம்.

செல்வ:—பிரபுவே! நான் இந்த விஷயத்தில் பிரவேசித்ததால் சில அதிசயமான சங்கதிகளை யறிந்து கொண்டேன். அதோடு மிக்க ஆபத்தான இக்கட்டுகளிலும் சிக்கிக் கொண்டேன். இப்போது நான் தங்கள் எதிரில் உயிரோடிருந்து சம்பாஷிப்பதே ஆச்சரியமான தெய்வ கடாட்சத்தால் நேர்ந்த விஷயமாகவே யிருக்க வேண்டும்.

பிரபு:—"அந்தோ! அப்படியா சம்பவித்தது. அப்படியாயின் தயவுசெய்து எல்லா சங்கதிகளையும் ஆதியோ

டந்தமாய்க் கூறு. இச்சமயம் என் மனக்கவலை நீங்க ஏதாவது அதிசய சம்பவங்களைக் கேட்பதாயின் மிக்க நலமே. நான் பொறுமையாய்க் கேட்கிறேன் கூறு" என்றார்.

செல்வநாதன்:—பிரபுவே! தாங்கள் கடந்த செவ்வாய்க் கிழமை காலையில்தான் இளவாசருக்கும் தங்களுக்கும் நேர்ந்த இக்கட்டைப்பற்றிக் கூறினீர்கள். ஆனால் அதைப்பற்றி தாங்கள் கூறிய மாதிரியால் சற்றேனும் உளவறிய வழியேயில்லையென்பது தாங்களறிந்ததே.

பிரபு:—ஆம். ஏனெனில் இளவரசன் எனக்கு விபரமான சங்கதிகள் ஒன்றுமே கூறவில்லை. அவர் கூறியவற்றி லிருந்து நானே கிரகித்துக்கொண்டு என்னால் கூடிய வரையில் அந்த அதிசயமாதின் அடையாளங்களை யொருவாறு உனக்குக் கூறினேன்.

செல்வ:—திங்கள் இரவு தாங்களும் இளவாசரும் ஏறி வந்த வண்டி மடக்கப்பட்டதையும் பிறகு நடந்த விவகாரங்களையும் நோக்க, அந்த தினம் இரவில் அவ்விவகாரத்தை நடத்துவதற்காக முன்னடியே ஏராளமான ஏற்பாடுகளனைத்தும் ஆயத்தமாய்ச் செய்யப்பட்டிருந்தனவென்று நன்றாய்த் தெரிந்துவிட்டது. அப்படியாயின் அன்றையதினம் நீங்கள் மாகதவல்லியம்மாள் வீட்டிற்குக் கட்டாயமாய் வரப்போகிறீர்களென்று அக்கள்ளருக்கு முன்னடி தெரிந்திருக்கிறது. இன்றேல் அவர்கள் யாவரும் ஒன்றுகூடி யப்படி ஆயத்தமாய் வந்திருக்கமாட்டார்கள். ஆகையால் நீங்கள் அன்று அங்குவருவதை யாரோ அவர்களுக்கு முன்னடி யறிவித்திருக்கிறார்கள். ஆகையால் மாகதவல்லி

யம்மாள் வீட்டில் யாரோ இதில் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள் என்று என் புத்தியிற்பட்டது.

ஆகையால் நான் செவ்வாய்க்கிழமை காலையில் தங்கள் சங்கதியைக் கேட்டுக்கொண்டு தங்களை விட்டுப் புறப்பட்டதே நோய் வீட்டிற்குச் சென்று ஒரு சாணைபிடிக்கும் ஆளைப்போல் மாறுவேட மணிந்துகொண்டேன். அது சுலபமான வேலையல்ல. என் உடைமட்டுமல்ல தேகத்தையும் வேற்றுரு வாக்கிக்கொள்ளவேண்டும். சாணை பிடிப்போர், அத்தொழில் ஒன்றல்ல, பூட்டுகளுக்குச் சாவிபோடுதல் குடைகள் பழுது பார்த்தல் முதலிய பல வேலைகளையறிந்திருக்கவேண்டும். அவற்றிற்கு வேண்டிய சாமான்கள் கருவிக ளனைத்தும் கையிலிருக்கவேண்டும். நான் யாவும் சேகரம் செய்துக்கொண்டு அன்றுமாலையே என் சக்கரம் வைத்தச் சாணைபிடிக்கும் எந்திரத்தோடும் மற்ற எல்லாக் கருவிகளோடும் மாரகதவல்லியம்மாள் வீட்டிற் கருகில் போய்ச் சேர்ந்தேன். அவ்விட்டிலுள்ள வேலைக்காரர்களைக் கண்டு சம்பாஷிக்கவேண்டுமென்பது என் கருத்து. சாணை பிடிக்கும் தொழிலால்தான் எத்தகைய செல்வந்தர் வீட்டிலும் பின்பக்கம் தாராளமாய்ச் சென்று வேலைக்காரரோடு சம்பாஷிக்கலாம்.

நான் அவ்வாறு சென்று அவ்வீட்டின் எதிரில் சற்று தூரத்திலிருக்கும் தோட்டத்தில் ஒரு மரத்தடியில் தங்கியதே அவ்வீட்டிலுள்ள பிரதமவேலைக்காரனுகிய சாரங்கன் என்பவனே என்னிடம் வந்தான். அவனைக் கண்டதேயவன் முகத்திலுள்ள சில குறிகளால் அவன் பெரிய கள்ளப்பயலென்று தெரிந்தது.

பிரபு:—என்ன சாரங்கன்! மரகதவல்லியின் பிரதமகாலாள். அவன் அப்படிப்பட்டவனென்று நான் கனவிலும் நினைக்கவேயில்லை.

செல்வ:—ஆம் நினைத்திருக்கமாட்டீர்கள். மனிதரைப் பழக்கத்தால் நான் பார்க்கும் உள் நாட்டத்தோடு தாங்கள் பார்க்கமாட்டீர்கள். மனிதரின் வெளிவேஷத்திற்குள் நுழைந்து பார்க்க மிக்க அனுபவம் வேண்டும். நான் அவனைப்பற்றி முதலில்கொண்ட அபிப்பிராயம், அவன் என்னிடம் வந்து முதலில் கூறிய சங்கதியாலேயே உண்மையென்று எனக்குப் புலப்பட்டு விட்டது.

பிரபு:—அப்படியானால் அக்கள்ளப்பயல்தான் இதில் உளவாயிருந்தவன்.

செல்வ:—பிரபுவே! யாவும் கூறுகிறேன். சற்று பொறுமையாய்க் கேட்டுக்கொண் டிருங்கள்.

பிரபு:—"சரி சரி இனி நான் ஒன்றும் பேசவில்லை. நீ யுன் கதையைக் கூறு" என்றார்.

செல்வ:—நான் சற்றுநேரம் அவனிடம் பேசிக்கொண் டிருந்தபோது, அவன் கள்ளரோடு சேர்ந்தவனென்றும், இன்னொரு புது குற்றத்தைச் செய்ய யோசித்திருக்கிறானென்றும் தெரிந்தது. சரி இவன்மேல் ஒரு கண்வைக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். இவன் திங்கள் இரவு நடந்த சங்கதியில் உளவென்று நிச்சயமாய்த் தெரிந்தபோதிலும் இன்னும் இவன் சங்கதிகளை யறியவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். இத்தகையோர் ஆலோசனை செய்வதற்கும், தங்கள் கூட்டாளிகளைச் சந்திப்பதற்கும் தக்கவிடம் ஹோட்டலே. ஆகையால் நான் அவனிடம் சம்பாஷித்து முடிந்ததே நேராய் ஹோட்டலுக்குச் சென்று கொஞ்சம் பீர்வாங்கி யருந்திவிட்டு அதை விட்டு வெளிப்பட்டேன். ஏனெனில் சாரங்கன் அங்கு வந்தால் சாணைக்காரன் வந்து போனானென்று தெரியட்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தேன்.

அங்கிருந்து நேராய் எனக்குச் சிநேகிதனுகிய அவ்வூர் போலீஸ் ஸார்ஜென்ட் வீட்டிற்குச் சென்று என் வேடத்தைக் கழற்றி முகத்தைச் சுத்தம் செய்துகொண்டு, ஒரு காட்டுப்புறத்தான்போல் முகத்தை முதல் மாற்றிக்கொண்டு பூரண மாறுவேட மணிந்து ஓட்டலுக்குச் சென்றேன். ஏனெனில் சாரங்கன் அங்கு வருவானென்று எனக்குத் தெரியும்.

நான் ஹோட்டலுக்குச் சென்று கொஞ்சம் பீர்வாங்கிக்கொண்டு பொசனம் அருந்திக்கொண் டிருந்தேன். அச்சமயம் நமது நகரத்திலுள்ள துரைத்தனக் கொலையாளியாகிய தானப்பன் ஹோட்டலுக்குள் வந்தான். வந்தவுடனே என்னையுற்று நோக்கிவிட்டுப் பிறகு பீர் வாங்கிக்கொண்டு அதே அறையில் ஒருபக்கம் உட்கார்ந்து குடித்துக்கொண் டிருந்தான். அவன் மாதிரியால் அவன் யாருக்கோஎதிர்பார்க்கிறுனென்று தெரிந்துகொண்டேன். உடனே நமது காரியம் அனுகூலமாய்த் திரும்புகிறதென்று எண்ணிக்கொண்டேன். ஏனெனில், அவன் சில விஷயங்களில் சம்பந்தப்பட் டிருக்கிறுனென்றுகேள்விப்பட்டு நான் அவன்மேல் கண்வைத்தேயிருக்கிறேன்; ஆகையால் சாரங்கன் இவனுேடுசம்பந்தப்பட் டிருக்கிறுனென்று என் மனதிற் பட்டது. சற்று நேரத்திற்குள்சாரங்கனே யங்குவந்தான். அவனும் வந்ததே யென்னையுற்று நோக்கினுன். ஆனுல் இவன் என்னை யறிந்துகொள்வானென்ற அச்சம் சற்றுமில்லை. ஏனெனில் தானப்பன் என்னைப் பலதரம் பார்த்து எனக்கு நன்ருய் அறிமுகமானவன். அவனே யென்னை யறிந்துகொள்ள முடியாதபோது சற்றுநேரமே என்னைக்கண்ட இச்சாரங்கன் எப்படி யறிந்துகொள்வான்?

உடனே யிருவரும் குசுகுசுவென்று பேசினுர்கள். அவர்கள் பேசிய வார்த்தைகள் யாவுமே என் செவிகளில்

கேட்காவிட்டாலும் தானப்பன் அக்கள்ளக் கூட்டத்தில் சேர்ந்தவர்களில் ஒருவனென்றும், சாரங்கன் அவர்களுக்கு உளவாயிருக்கிறனென்றும் தெரிந்துகொண்டேன்.

பிரபு:—ஆ! நீ தானப்பன் என்றதே எனக்கு ஒரு சங்கதி கவனத்திற்கு வந்தது. அன்று இரவு அவ்வதிசய மாதின் வீட்டில் அக் கள்ளர்கள் பேசிக்கொண்ட போது, ஒருவனைத் தானப்பாவென் றழைத்தார்கள். அவர்கள் என் கைப் புத்தகத்தை யெடுத்துக்கொண்ட போது அதன்மேல் சுத்தி அதற்கு முத்திரை போடுவதற்காக அவனைத் தான் கடிதம் கொண்டு வரும்படி கூறினார்கள். ஆயினும் கொலையாளியோடு சம்பந்தப்பட நேர்ந்ததென்றால்......,

செல்வ:—பிரபுவே! இதற்காக விசனப்படலாகாது. உலக அனுபவத்தில் இத்தகைய சம்பவங்கள் நேரிடுவது சுபாவமே. இனி சங்கதியைத் தொடர்ந்து கூறுகிறேன். அவர்க ளிருவரும் சிரத்தையோடு இரகசியமாய்ப் பேசத்தொடங்கவே நான் நித்திரை போய் விட்டவன்போல் அபிநயம் செய்தேன்.

அதன்மேல் அவர்கள் சற்று தாராளமாய்ச் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் வேறொருவிடத்தில் களவாட ஏற்பாடு செய்திருக்கிறார்களென்றும், வரப்பட்ட சொத்துகளை வாங்கும் கிழநரி என்ற ஒரு ஆசாமி நகரத்தில் இருக்கிறனென்றும் தெரிந்தது. தாங்கள் களவாட உத்தேசித்திருக்கும் வெள்ளிச்சாமான்கள் முதலியவற்றை யவனிடம் கொண்டு போவதாகப் பேசிக்கொண்டார்கள். சுருக்கமாய்க் கூறும்பட்சத்தில் அவர்களுடைய அந்தரங்கங்கள் யாவும் எனக்குத் தெரிந்தன. அவர்கள் ஹோட்டலை விட்டுச் சென்றபின் நானும் புறப்பட்டேன். தங்கள் விவ

காரத்திற்கு நேர்உளவு எனக்குக் கிடைத்துவிட்டது. ஆனால் இதில் எப்படி நடந்துகொள்வதென்று சிந்திக்கவேண்டிய தாயிற்று. ஏனெனில் இச்சங்கதி வெளியில் வாராமல் இரகசியத்திலே முடிவுபெறவேண்டுமென்று தாங்கள் கூறியிருக்கிறீர்கள். அதனால் நான் என்னிஷ்டப்படி எதையும் பகிரங்கமாய்ச் செய்கிறதில்லை......

பிரபு:—ஆம் ஆம். இளவரசனுக்காக அப்படித்தான் நடைபெறவேண்டும்.

செல்வ:—மறுநாள் புதவாரம் காலையிலிருந்து இரவு பனிரண்டு மணிவரையில் தங்கள் வீட்டெதிரில் பிச்சைக்கார வேடந்தரித்து உட்கார்ந்திருந்தேன். தங்கள் புத்தகத்தைக் கொடுத்து பணம் வாங்கிப்போக வரும் ஆளைப் பின் தொடர்ந்து அவனை யறியவேண்டுமென்றீர்கள். கடைசியில் அத்தகைய ஆள் வரவேயில்லை. அதன்பின் நேராய் வீட்டிற்குச் சென்று மறுபடி சாணை பிடிப்பவன் வேடமணிந்து ஜாடித்தீவிலிருக்கும் ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். மிக்க போக்கிரிகளான கள்ளப்பயல்களெல்லாம் கும்புகூடு மிடங்களில் அது ஒன்றென்று எனக்குத் தெரியும். அதோடு கள்ள நகைகளையும் சொத்துகளையும் வாங்கும் அக்கிழநரி யென்பவன் அங்கு வரும் முறைநாள் அன்றுதானென்று எனக்குத் தெரியும். மேலும் தானப்பன் சாரங்கனோடு பேசிய மற்றொரு விஷயத்தைப்பற்றி அதில் அகப்படும் பொருள்களை விற்பதற்காக அக்கிழநரியிடம் முன்னாடிபேசி ஏற்பாடு செய்துக்கொள்ளப் பெரும்பாலும் அங்கு வருவான் என்பது என் உத்தேசம். அதாவது எப்படியாயினும்,இக் கள்ளரைப்பற்றிய இன்னும் சில விஷயங்களை யங்கறியலாம் என்று

என் மனதிற் றோன்றியது. என் மாறுவேடத்தில் பூரணநம்பிக்கை வைத்துத் துணிகரமாய் அச்சிங்கங்கள் இருக்கும் குகைக்குள் நுழைந்தேன். அப்போது மணி இரவு ஒருமணியிருக்கும். அவர்கள் என்னைத் தங்கள் இனத்தவரில் ஒருவன் என்று நம்பும்படிக்கு என் முகத்திற்கு வர்ணம் பூசிக்கொண்டதோடு, அவர்கள் கள்ளபாஷை யெனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவர்கள் சந்தேகப்படாமற்படிக்கும் சீக்கிரத்திலேயே நானும் அவர்களைப்போல் ஒரு கள்ளனென்றே யவர்கள் நம்புமாறும் நடந்துகொண்டேன். அதற்கு அத்தாட்சியாக முன்னாளே சாரங்கனிடம், துப்பறியும் செல்வநாதன் என்னைப் பிடிக்க முயற்சி செய்துக் கொண் டிருப்பதாலேயே நான் நாட்டுப்புறப்பக்கம் வந்திருப்பதாய்க் கூறி யிருந்தேன். அதன்பிறகே யவன் என்னைப் பூரணமாய் நம்பிக்கொண்டான்.

நான் அங்கு வந்ததற்குக் காரணம் களவாடப்பட்ட சாமான்களை வாங்கிக்கொள்ளும் கிழநரியை யொரு வேலையாய்க் காணவேண்டுமென்று அபிநயித்தேன். அக்கிழவனிடம் நான் எங்கோ பெரிய கொள்ளையடிக்கப் போவதாகவும் அதில் மிக்க வெள்ளிச்சாமான்கள் கிடைக்குமென்றும், அவன் அவைகளை வாங்கிக்கொள்வதாயின் நான் கூறும் காலத்தில் அவற்றைக் கொண்டுவந்ததே யாவற்றையும் உருக்கிவிட அவன் ஆயத்தமா யிருக்கவேண்டுமென்றும் கூறினேன். யாவும் கேட்டதே அக்கிழவன் வாயில் நீரூறியது.

சற்றுநேரத்திற்குள் கொலையாளியாகிய தானப்பன் அங்கு வந்தான். அவனுக்கும் அதே கதையைக்கூறி அவனையும் அக்களவிற்குக் கூட்டாளியாக வரும்படி ஏற்

பாடு செய்துகொண்டேன். பிறகு அங்கு கூட்டமாய்க் கூடியிருந்த கள்ளர்கள் பேசும்போது ஒரு விசேஷசங்கதியையுணர்ந்தேன். அது கள்ள நாணயம் செய்யும் ஒரு கூட்டத்தைப்பற்றியது. ஆனால் திங்கட்கிழமை நடந்த சம்பவத்தைப்பற்றி யொரு பிரஸ்தாபமும் வெளிவாவில்லை. நான் அதைப் பிரஸ்தாபிக்கலாகாது.

கடைசியில் நான் அந்த விடத்தைவிட்டுப் புறப்படப் போகும் சமயத்தில் அங்கிருந்த கள்ளக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருமாது, யாரோ ஒரு கன்னிகையை யேமாற்றி யங்கு கொண்டுவந்துவிட்டாள். அவள் யாரோ நல்ல அந்தஸ்தைச் சேர்ந்தவளென்றும் ஏதோ கெட்டகாலத்தால் திசைதப்பி இவர்களிடம் அகப்பட்டாளென்றும் என் மனதிற்பட்டது. அவளிடம் நல்ல உடைகளும், நகைகளும் ரொக்கப்பணமும் இருந்தது. அத்துஷ்டப் பாதகர்கள் அவளைக் கொல்லத் தீர்மானித்துவிட்டார்கள். கொலைத்தொழிலைச்செய்ய ஆட்களும் நியமிக்கப்படும்சமயம். அத்தொழிலை நான் செய்வதாய் வலிய ஒப்புக்கொண்டேன்........

பிரபு:—அந்தோ! நீ யேன் அதில் பிரவேசிக்கவேண்டும்?

செல்வ:—ஏனெனில் அப்பரிதாபமும் நிராதரவுமான கன்னிகையைக் காப்பாற்ற வேறுவழி புலப்படவில்லை. நான் அவ்வாறே யவள் இருக்கும் அறைக்கு அவளைக்கொல்லச் செல்பவன்போல் சென்று, அவளுக்கு எச்சரிக்கைசெய்து அந்த அறையிலிருந்த சாளரத்தின் வழியாய் அவளை வீதியிலிறக்கிவிட்டேன். அவள் பாதை வழியே துரிதமாய் ஓடுவதைக் கண்டேன்; ஆனால் நானும் அவ்வழியே வெளிகிளம்ப முயல்வதற்குள் எப்படியோ சந்தேகித்து அறைக்குள் வந்துவிட்டார்கள். நான் சாளரத்தைத் தாண்டிக் குதித்தபோது கால்

இடறி விழுந்துவிட்டேன். என் தலையில் பலத்த காயம் பட்டதால் எனக்கு ஸ்மரணை நீங்கிவிட்டது,

பிறகு நடந்ததைச் சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன். அக்கன்னிகை தெய்வகடாட்சத்தால் தன்னைத் துறத்திப் பிடிக்கவந்த கள்ளரிடம் சிக்காமல் தப்பித்துக்கொண்டாள். என் சங்கதி எனக்குத் தெரியாது. ஆனால் அத்துஷ்டர் என்னைக் கொன்றுவிடத் தீர்மானித்து வீட்டின் பின்பக்க முள்ள அகழியில் என்னை யெறிந்துவிட்டார்கள் என்று தெரிந்தது. ஏனெனில், எனக்கு ஸ்மரணைவந்தபோது நான் அகழியில் இருக்கிறேன். நற்காலமாய் தெளிவான ஆற்று நீர் அகழியில் வந்து அச்சமயம் விழுந்துகொண்டிருந்த தால் நான் களைப்புத்தீர்ந்து மெதுவாய் உயிர்தப்பிக் கரை யேறி சற்று சமீபத்திலிருக்கும் எனக்கு நண்பனுன ஒரு வன் வீட்டையடைந்தேன்.

---

41 - வது அத்தியாயம்.

செல்வநாதன் கூறிய மொழிகளைக் கேட்ட பிரபு மிக்க திகிலடைந்து "அய்யோ கடவுளே! அத்தகைய பிராணுபத்திலா சிக்கிக்கொண்டாய்?" என்றார்.

செல்வ:—ஆம். ஆயினும் கடவுள் தயவால் அதிலிருந்து காப்பாற்றப்பட்டபின் அதைப்பற்றி வியாகூலப்படு வதில் பயனில்லை. நான் கூறியபடியே அந்த நண்பன் வீட்டில் என் வேடங்களையெல்லாம் கழற்றி யொழித் துச் சற்று இளைப்பாறினேன். அதற்கிடையில் அந்த நண்பனை யனுப்பி யவன் மூலமாய் அக்கன்னிகை சில தொழிலாளிகளால் காப்பாற்றப்பட்டாளென்று அறி ந்துகொண்டேன்.

பிறகு அங்கிருந்து என் வீட்டிற்குச் சென்று நல்ல யுடை யணிந்துகொண்டு கோரய்த் தானப்பன் வீட்டிற்குச் சென்றேன். அவன் வீட்டில் க்ஷவரவேலை செய்கிறன்......

பிரபு:—அவன் வீட்டிற்கு ஏன் சென்றாய்?

செல்வ:—ஏனெனில் கடந்த இரவு நான் ஸ்மாரணை தப்பிய பின் நடந்த சங்கதி யின்னதென்று எனக்குத் தெரியாது. ஆகையால் அக்கள்ளர்கள் நான் இன்னு னென்ற உண்மையை யறிந்துகொண்டார்களோ இல்லையோ வென்பதை யறியவேண்டுமென்பது என்நோக்கம். நான் அவன் எதிரிற் சென்றதே அவர்கள் என்னை யறிந்துகொள்ளவில்லையென்று தெரிந்துகொண்டேன். அதற்கு மாருக இரவு ஜாடித்தீவில் நடந்த சங்கதியை நான் அறிந்துகொண்டுதான் வந்தேனே வென்று தானப்பன் திகிலடைந்தான். அவனேடு சம்பாஷித்தால் ஏதாவது உளவகப்படுமென்றெண்ணி நான் க்ஷவரம் செய்துக்கொள்ள உட்கார்ந்தேன். என்தொழில் முறைமையால் எந்த விஷயத்தையும் எப்போதும் மிக்க உன்னிப்பாய்க் கவனிப்பது வழக்கம். மிக்க அற்பமான சம்பவங்களிலிருந்துங் கூட விசேஷ உளவுகளை யறிந்துகொள்ளலாகும். எனக்கு அது மிக்க அநுபவம். இச்சம்பவத்தில் அப்படியே நேர்ந்தது.

சற்றுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தபோது தானப்பனிடம் வேலைசெய்யும் ஆட்களில் ஒரு வாலிபனைக் கண்டதும் அவனை நமது வழிக்குத் திருப்பிக்கொள்ளலா மென்று என் புத்தியிற்பட்டது. ஆகையால் அவனை இரண்டொரு நாட்கள் என்னிடம் வந்திருக்கும்படி ஏற்பாடு செய்தேன். இதற்கிடையில் சிலநிமிடங்கள் நான் தனியாய் அந்தக்கூடத்தில் இருக்கநேர்ந்தது. அச்சமயம் கீழே

விழுந்துகிடந்த ஒரு கடிதத்தைக் கண்டெடுத்துப் பார்த்த தும் அது திங்கள் இரவுநடந்த சம்பவத்தைச் சேர்ந்த தென்று தெரிந்துகொண்டு அதைப் பத்திரமாய் மடியில் வைத்துக்கொண்டேன். அக்கடிதம் இதோ விருக்கிறது. அதை வாசித்துக் காட்டுகிறேன் கேளுங்கள்'' என்று கீழ்க் கண்டபடி வாசித்தான்:—

''பருதிபுரம்

6—9—1814.

போதுமான ஆட்கள் கிடைத்தவரையில் காரியத்தை யுடனே செய்துவிடலாம். ஆனல் நாம் செய்யும் காரியத் தின் மூலகாரணம் இன்னதென்று உன்னைத்தவிர உன் கூட் டாளிகள் எவருக்கும் தெரியலாகாது. அவர்களுக்கெல்லாம் கொள்ளை யடிப்பதற்காகவே இது நடக்கிறதென்றே கூறப் பட வேண்டும். இளவரசன் அந்தவிடத்திற்கு வாரத்திற் கிருமுறை செல்கிறதாய்க் கூறுகிருய். அத்தகைய சமயங் களில் ஒன்றே நமது வேலைக்குத் தகுதியானது என்றும் கூறுகிருய். சரி, அப்படியே நடக்கட்டும். நீ கூறுகிற அக்காவாள் சாரங்கன் என்பவன் நம்பத் தக்கவனு வென் பதைச் சரியாய்க் கவனித்துக் கொள். நீ கூறியபடி அவன் முன்னுடி இருபது பவுனும், இக்காரியம் நிறைவேறியதே மற்ற இருபது பவுனையும் பெற்றுக்கொள்ளட்டும். எல்லாம் இரகசியமாய் நடக்கட்டும். நான் என் மனைவியோடு பத் தாந்தேதி இரத்தினபுரியில் ஆயத்தமா யிருப்பேன். இதற் கிடையில் நீ கீழ்க்கண்ட ஏற்பாடுகளைச் செய்துவிட வேண் டும். அதாவது, அந்த வீட்டை..............''

இவ்வளவே யக்கடிதத்தி லிருந்தது, மற்ற பாகம் கிழிந்துபோ யிருந்தது.

செல்வநாதன் மேற்கண்டபடி வாசித்துக் காட்டிவிட்டு அக்கடிதத்தை மடித்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு பிரபுவை நோக்கி,

"பிரபுவே நான் கூறியபடி தானப்பன் வீட்டிலிருந்த அவ்வாலிபனை யென் வீட்டிற் கழைத்துவந்து அவனுக்கு நல்ல ஆகாரம் தாராளமா யளித்து அவனை யன்போடு நடத்தியதோடு அவனுக்குப் பின்னால் பல நன்மைகளைச் செய்து அவனை யுயர் நிலைமைக்குக் கொண்டு வருவதாய் வாக்களித்து, அவனுக்கு என்மேல் நம்பிக்கையும் அன்பும் உண்டாகும்படிச் செய்துகொண்டேன். நேற்று நெடுநேரம் அவனிடம் சம்பாஷித்துக் கடைசியில் திங்கட்கிழமை யிரவு இளவரசரும் தாங்களும் அவ்வளவு இரகசியமாய் அழைத்துக் கொண்டு போகப்பட்ட வீடு வெளிப் பேட்டையி லுள்ள வாசுதேவ நிலயம் என்று அறிந்துகொண்டேன்." என்றதே;

இதைக் கேட்ட பிரபு திடுக்கிட் டெழுந்து "என்ன! வாசுதேவ நிலயமா? அப்படியாயின் அப்பிரபு இதில் சம்பந்தப்பட்டிரு......" என்பதற்குள்

செல்வ:—"இல்லை யில்லை அப்பிரபு இதில் சம்பந்தப்பட்டேயிரார். அம்மாளிகையை வாடகைக்கு எடுத்துக்கொண்டவர்கள் என்ன உத்தேசத்தோடு அப்படிச் செய்தார்களென்று அவருக்குத் தெரிந்தே யிராது" என்றான்.

பிரபு:—"அவர் கடன் முதலியவைகளுக்காக நாட்டை விட்டோடிப்போய் அன்னியநாட்டி லிருப்பதாய்க் கருதியிருக்கிறேன்" என்றார்.

செல்வ —ஆம் ஆம். அந்தவிடம் இன்னதென்று தெரிந்த வரையில் இனி நேராய்ப் போய் அங்கு இப்போது

யாரிருக்கிறார்க ளென் றறிந்துகொண்டு, மெதுவாய் அங்குள்ளவர்களைக் கண்டு பேசவேண்டும். அதோடு இப்போது என்னிடம் அகப்பட்டிருக்கும் கடிதம் அங் கிருக்கிறவர்களில் யாராவது எழுதப்பட்டதாவென்று அறியவேண்டும். ஆகையால் நான் உடனே வேறு ஒரு மாறுவேட மணியவேண்டியதாயிற்று. இச்சம யம் ஒரு தபால்காரனைப்போல் மாறுவேட மணிந்து உடனே வெளிப் பேட்டைக்குச் சென்று அந்த வீட் டில் இருப்பவர்கள் யாரென்று அறிந்துகொண்டேன்.

பொன்னுசாமி பிள்ளை என்பவனும் அவன் மனைவி பத்மாட்சி யென்பவளும் அங்கு வசிக்கிறார்க ளென்றும் அவர்கள் பாஞ்சால நாட்டில் இருந்து வந்து ஒரு வாரமே யாயிற்றென்றும் தெரிந்தது. நாம் சரியான வழியிலேயே செல்கிறோ மென்று அறிந்ததும் அம்மாளிகைக்குச் சென் றேன். அந்த வீட்டின் அடையாளங்க ளனைத்தும் தாங் கள் கூறியபடியே யிருந்தது. வீட்டின் பக்கத்தில் ஒரு வாசற்படி, தாங்கள் கூறிய கறுப்புத் திரைச் சீலை விடப் பட்ட அறை, குதிரை வண்டி விடும் பிரத்யேகக் கட்டிடம் யாவும் சரியா யிருந்தன.

வேலைக்காரனிடம் பேசியபின் நேராய் அம்மாதைக் கண்டேன். அவள் கணவன் வீட்டிலில்லை. அம்மாது இருந்த அறை இளவரசன்விவரித்த அறையே. அந்த அபூர் வமாது அந்தப் பத்மாட்சியே. நான், வாசுதேவப் பிரபு வுக்கு ஒரு முக்கியமான கடிதம் வந்திருப்பதாகவும், அவ ருடைய தற்கால விலாசத்தை யறிந்து அதை யவருக் கனுப்ப வேண்டு மாகையால், அவர் விலாசத்தைக் கேட் டறிந்துகொள்வதற்காகவே வந்தேன் என்று கூறினேன். அம்மாது முதலில் சற்று தடுமாற்ற முற்றாலும் பிறகு

சென்று அவர் விலாசம்எழுதிய கடிதத்துண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். அது, கடைசிதரமாய் அவரைக் கண்ட போது தன் கணவன் தன் கைப்பட எழுதிவந்த தென்றும் இப்போது தான் அதற்கொரு நகல் எடுத்துக்கொண்டதால் அக் கடிதத்தை நானே யெடுத்துக்கொள்ளலா மென்றும் கூறினள்.

பிரபு:—அம்மாது மிக்க அழகிதானே ?

செல்வ:—ஆம். அபூர்வ வனப்புடையவள் என்பதில் சற்றும் அய்யமே யில்லை.

பிரபு:—மதனவல்லி யென்ற இன்னெரு கன்னிகை புதிதாய் நமது நகரத்தில் வந்திருக்கிறுளே அவளை நீ யெப்போதாவது பார்த்திருக்கிறுயா ?

செல்வ:—சிலரால் காட்டப்பட்டு அவள் வண்டியில் செல்லும்போது இரண்டுமூன்று முறை பார்த்திருக்கிறேன்.

பிரபு:—இவர்களிருவரில் யார் மிக்க அழகு ?

செல்வ:—பிரபுவே! மதனவல்லியின் அழகே விசேஷமானதும் பரிசுத்தமானதும். ஆனல் அவளுக்கு இரண்டாவது இம் மாதே யென்பதிற் றடையேயில்லை.

பிரபு:—சரி. அப்புறம் சங்கதியைக் கூறு.

செல்வ:—இன்னும் அதிகம் கூறவேண்டிய தொன்றுமில்லை. அம்மாதின் புருடன் கையெழுத்தைத் தானப்பன் வீட்டிலகப்பட்ட இக்கடிதத்தின் எழுத்தோடு ஒத்திட்டுப் பார்த்தேன். உடனே அக்கடிதம் அப்பொன்னுசாமிப்பிள்ளை யெழுதியதே யென்றும், திங்கள் இரவு நடந்த விவகாரத்தில் அவன் சம்பந்தப்பட்டவனேயென்றும் தெரிந்துவிட்டது.

பிரபு:—அப்படியானல் அவனே. அந்த அபூர்வமாது. அவள் கணவனும் ஒன்றுசேர்ந்தே யந்த ஏற்பாடு நடந்திருக்கிறது.

செல்வ:—ஆம். அது உண்மையே. இக்காதல் நாடகம் இளவரசனை யேமாற்றி யவரிடம் அப் பத்திரத்தில் கையொப்பம் வாங்குதற்காகவே நடத்தப்பட்டது, முக்கியமான நோக்கம் அதுவே. அதற்காகவே அன்று திங்கள் இரவு நடந்த விவகாரம் முழுமையும் நடைபெற்றது. ஆனல் அதில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆசாமிகள் தவிர மற்றபடி உதவியாய் வந்தவர்களெல்லாம் கொள்ளை யடிப்பதற்கே யிந்த ஏற்பாடு நடக்கிறதென்று நம்பும்படி தந்திரம் செய்யப்பட்டது. ஆசையால் பத்மாட்சி தன் கணவனுல் தூண்டப்பட்டே யிதில் பிரவேசித்திருக்கிருளென்று நன்ருய்ப் புலப்படுகிறது.

பிரபு:—செல்வநாதம்! இந்த விஷயத்தில் நீ மிக்க சிரத்தை யெடுத்துக்கொண் டிருக்கிருய். மிக்க சாமார்த்தியத்தை யுபயோகப்படுத்தி யதைக் கண்டுபிடித்திருக்கிருய். பிராணபத்தான இக்கட்டுகளில் சிக்கிக்கொண் டிருந்தாய். ஆனல் இளவரசனுக்காக இச்சங்கதியை பகிரங்கத்தில் கொண்டுவருவதற் கில்லையென்று மிக்க விசனப்படுகிறேன்.

செல்வ:—ஆம் ஆம். நான் அதை முன்னமே யறிந்து கொண்டிருக்கிறேன்.

பிரபு:—உன்னை ஜாடித்தீவில் கொலைசெய்ய முயன்றவர்களைத் தண்டிக்க முயற்சி யெடுத்துக்கொள்ள மாட்டாயோ?

செல்வ:—இல்லை பிரபுவே. ஏனெனில் அப்படி நான் செய்தால் அந்த விடத்திற்கு ஏன் சென்றேனென்று காரணம் கூறவேண்டியதா யிருக்கும். அப்போது இளவாசர் சங்கதி வெளிவரும். அதற்காகவே நான் அதைப் பிரஸ்தாபிக்காம லிருக்கவேண்டியதா யிருக்கிறது.

பிரபு:—நீ யப்படித்தான் நடந்துகொள்வாயென்று நான் நினைத்தேன்.

செல்வ:—இதுமட்டுமல்ல. தானப்பன்மேல் நான் வேறு வழியாய் வஞ்சம் தீர்த்துக்கொள்வேன். பெரும்பாலும் நாளை யிரவே தீர்த்துக்கொள்வேன். இப்போது என் கூடவிருக்கும் அவனைக்கொண்டே யக்கூட்டம் முழுமையும் நான் பிடித்துக்கொள்வேன். தங்கள் வீட்டில் தங்கள் புத்தகத்தைக் கொண்டுவந்து வைத்தது யார் என்பதற்கு ஒரு உளவும் அகப்படவில்லையே?

பிரபு:—எள்ளளவும் அகப்படவில்லை. வந்தவர்கள் என் சகோதரன் புத்திரன் ஒருவன், புத்திரி ஒருத்தி, மற்ற இருவரும் மரகதவல்லி யம்மாளும், பத்மாவதியுமே. இவர்களில் யாரைத்தான் நான் சந்தேகிக்கக் காரண மிருக்கிறது?

இவர்கள் நால்வரில் எவரும் அந்த விஷயத்தில் சம்பந்தப்பட் டிருக்க மாட்டார்கள் என்று நான் சத்தியமாய்க் கூறுவேன்

செல்வ:—இனி நான் போய் வருகிறேன். தாங்கள் இடவேண்டிய கட்டளை யேதேனுமுண்டோ ?

பிரபு:—ஒன்றுமில்லை. இதோ யிந்த ஐந்நூறு ரூபா செக்கைத் தயவுசெய்து தற்சமயம் கைச்செலவிற்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

செல்வநாதன் செக்கை யேற்றுக்கொண்டு வந்தன மளித்து விட்டு, பிரபுவை நோக்கி "இப்போது நான் கூறிய சங்கதிகளி லெதையும் மரகதவல்லி யம்மாளிடம் கூறவேண்டாம்" என்று கோரிக்கொண்டான். பிரபு அவ்வாறே வாக்களித்த பின் செல்வநாதன் விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

அவன் சென்றதே, "ஆ! இந்த அதிசயமாதாகிய பத்மாட்சியை யெப்படியும் எனக்குச் சொந்தமாக்கிக் கொள்வேன். இனி யது சுலபமாய் நடக்கும் காரியமே. எனக்கு அந்த மதனவல்லி நடந்துகொண்ட மாதிரியால் அவள்மேல் மிக்க வெறுப்பாய்விட்டது. அதற்குப் பதில் பத்மாட்சியை யடைந்து திருப்தியடைவேன்" என்று வயோதிகக் காமுகனாகிய அப்பிரபு தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

அதன்பிறகு பிரபு சமீபத்திலிருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டுத் தன் அந்தரங்க ஆளை யழைத்துவரக் கட்டளையிட்டார். அவன் வந்ததே பிரபு அவனைநோக்கி, "நீயுடனே சென்று நான் ஒரு விசேஷமான சமாசாரத்தைப்பற்றி பேச வேண்டி யிருப்பதால் உடனே இங்குவரச் சொன்னேனென்று கௌரியிடம் கூறிவிட்டுவா. கூடியவரையில் துரிதமாய் வரும்படி கூறு" என்று கட்டளையிட்டார்.

அந்தரங்க வேலைக்காரன் "அப்படியே. இதோ இக்கடிதம் இப்போதுதான் வந்தது" என்று ஒருகடிதத்தை யளித்துவிட்டுச் சென்றான். பிரபு உடனே யதைப் பிரித்துப் பார்த்தார். அது இளவரசனிட மிருந்து வந்தது. அதில் கீழ்க்கண்டபடி யெழுதியிருந்தது.

"21—9—1814 சனிக்கிழமை.

என் பிரியமுள்ள சுகசிங்கம் பிரபுவிற்கு:—

நீ நமது துரைத்தனத்திற்கும் நாட்டிற்கும் செய்த உதவிக்காக அரசர் பிரதிபலனளிக்க விரும்பி நான் தங்களுக்குக்

கூறிய பட்டத்தை யளித்திருக்கிறீர். அதற்காக நான் மிக்க சந்தோஷமடைகிறேன். இந்தசந்தோஷ சங்கதியை யுனக்கு மிக்க ஆவலோடு அறிவிப்பதோடு என் மாறாத அன்பையும் இதன் மூலமா யறிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
இளவரசன்"

பிரபு அதை வாசித்ததே மிக்க சந்தோஷத்தோடும் பெருமையோடும் அதை மடித்து மறுபடி கடித உறையிற் போடப்போனார். அச்சமயம் அதற்குள் இன்னொரு சிறு கடிதம் மடித்து வைக்கப்பட் டிருப்பதைக் கண்டு அதை யெடுத்து வாசித்தார். அதில் பின் கண்டவாறு எழுதப்பட் டிருந்தது:—

"ஓ கள்ளனே! மதனவல்லி விஷயத்தில் நீ எனக்குத் துரோகம் செய்து என்னை யேமாற்றப்பார்த்தாய். ஆனால் பட்டத்தைப்பற்றிய உத்திரவை நான் வாக்களித்தபடி நேற்றே யனுப்பாதபடியால் நீ யதற்குப் பதில்செய்தாய். ஆயினும் இதற்காக நமக்குள் மனஸ்தாபம் வேண்டாம். மதனவல்லி உன்மேல் பிரியங் கொள்ளாமல் என்மேல் காதல் கொண்டாள். ஆதலால் நீ யவளுக்குச் செய்த அபசாரத்திற்குத் தக்கபடி அவளே யுன்னைத் தண்டித்துவிட்டாள். அவ்வளவே போதும். அந்த அபூர்வமாதைப்பற்றி யேதேனும் சமாசாரம் தெரிந்ததோ?"

இதை வாசித்தபின் பிரபு "சரி, எப்படியோ நமக்கு பட்டம் கிடைத்துவிட்டது. இப்போது நமக்கு அந்த அதிசயமாதாகிய பத்மாட்சி கிடைக்கிறவரையில் இளவாசனும் மதனவல்லியும் எப்படியாவ தொழியட்டும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

42 - வது அத்தியாயம்.

சனிக்கிழமை மாலை மூன்றுமணிக்கு மதனவல்லி மறுபடி நல்லவுடையணிந்து தன் அறையில் உட்கார்ந்து யார் வரவிற்கோ எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். ஆனால் மற்ற நாட்களில் நடந்துகொண்டதுபோல் இன்று காண்பவர் மனதை வசீகரிக்கும்வண்ணம் அலங்கரித்துக்கொள்ள முயலவில்லை. விசேஷமான ஆபரணங்கள் ஒன்றுமே யணிந்து கொள்ளவில்லை. சுத்தமான ஒரு பட்டுடையை யணிந்துகொண்டு அமைதியோ டிருந்தாள்.

சற்று நேரத்திற்குள் தெருக் கதவு பலமாய்த் தட்டப்பட்ட சத்தம் கேட்டது. வேலைக்காரன் சென்று கதவைத் திறந்ததும் செல்லப்பன் அறைக்குள் வந்தான். மதனவல்லி யவனைக் கண்டதும் நன்றாய்ப் பழகியுள்ள சினேக வாஞ்சையோடு அவனை யெதிர்கொண் டழைத்து, புன்னகையோடு "இன்று உன் முறைப்படி நீ யென்னைக் காண வந்தாயாக்கும்" என்றாள்.

செல்லப்பன் சோபாவில் அவள் அருகில் உட்கார்ந்துகொண்டு சந்தோஷத்தோடு நகைத்துக்கொண்டே "ஆம் ஆம். சனிக்கிழமை யென்முறையாதலால் அச் சுதந்தரங் கொண்டு நான் வந்தேன். ஆனால் இந்த மாளிகைக்கு நான் வந்தது இதுதான் முதல்தரம் என்பது உன் நினைவிலிருக்கட்டும்" என்றான்.

மதனவல்லி:—இந்த வீட்டைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

செல்லப்பன்:—இது நான் கேள்விப்பட்டதுபோல் நேர்த்தியாகவே யிருக்கிறது. நான் ஒன்று கேட்கிறேன்.

அதற்கு உண்மையான விடை கூறு. இன்று நான் வருவேன் என்று நீ யுண்மையாகவே எதிர் பார்த்தாயா? அல்லது, மற்றவர்களைப்போல் நானும் முறைப்படி வந்தது உனக்கு மனவருத்தமோ ?

மதனவல்லி:—"நீ வருவாயென்று நான் பூரணமாய் எதிர் பார்த்தே யிருந்தேன். நீ வந்ததற்கு எனக்குச் சற்றேனும் மனவருத்தமில்லை" யென்றுள்.

இவர்கள் மாலை ஏழுமணிவரையில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சம்பாஷணை போகப் போக காதலிலும் பிரவேசிக்கிறது. அதை விரிக்கிற் பெருகும். ஆகையால் நாம் நம் கதைக்கு வேண்டிய விஷயங்களைமட்டும் சுருக்கமாய்க் கூறிவிடுகிறோம்.

செல்லப்பன் அவளை யறிந்ததுமுதல் அவள்மேல் காதல்கொண்டிருக்கிறன். ஆனால் மரியாதையும் நாணயமும் யோக்கியதையு முடையவனுதலால் தன்காதலை யிதுகாறும் வெளியிடாமலே யிருந்தான். மதனவல்லியின் சங்கதிகள் யாவும் அவனுக்குத் தெரியும். அதோடு அவள் இளவாசன் காதலுக்கு ஒப்புக்கொண்டதும் அவர்களுக்குள் நடந்த ஏற்பாடுகளும் அவனுக்குத்தெரியும். ஆயினும் அவன் அவள்மேல் கொண்டிருந்த அபரிமிதமான காதலால் அவள் இளவாசனுக்கு வைப்பாட்டியா யிருப்பதாயினும் அதற்குச் சம்மதித்தேதான் அவளை மணம்செய்து கொள்வதாய் ஒப்புக்கொண்டான். மதனவல்லி யவன் காதலின் அளவை யறிந்ததே, "நீ இவ்வாறு அன்புகொண்டிருக்கிறவரையில் நான் இந்த ஏற்பாடுகளையெல்லாம் அடியோடொழித்து விட்டு உன்னையே மணம்செய்து கொள்கிறேன், நாம் மிக்க ஏழைகளாய் வாழவேண்டி யிருந்தாலும் அவசியமில்லை. எனக்கு தையல், பூவேலை, திரைகள் முதலியவற்றில் சரிகையில் சித்

திரவேலை செய்தல் முதலிய பலவேலைகள் தெரியும். நான் இரவும் பகலும் வேலைசெய்வேன்'' என்ருள்.

செல்லப்பன் அவள்மேல் கொண்ட காதலால் அவள் தன் பிரியப்படி நல்ல போகபாக்கியத்தை யனுபவிக்கட்டுமென்று அந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டான்.

கடைசியில் இளவரசன் ஏற்பாட்டின்படி அவனே மதனவல்லியின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்று அந்த ஏற்பாட்டின்படியே நடப்பது நலமென்று கூறினுன். அதனுல், இருவரும் கூடிய சீக்கிரத்தில் மணம் புரிவதென்று தீர்மானம் செய்துகொண்டார்கள். கடைசியில் செல்லப்பன் அம்மாளிகையிலிருந்து வெளிப்பட்டான்.

மதனவல்லியின் வீட்டில் நடக்கிற எல்லா சங்கதிகளேயும் எதிரிலிருக்கும் ஹோட்டலிலிருந்து கபுர் கிருஷ்ணன் வேவு பார்த்துக்கொண்டிருக்கிருனென்பது நண்பர்களறிந்த சங்கதியே. அவன் செல்லப்பன் வெளிவந்ததைக் கண்டதும் தன் கையாளும் தோழனுமாகிய எச்சனே நோக்கி, ''செல்லப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். இவன்ருன் மதனவல்லியை வந்து பார்த்துவிட்டுச் சென்றவர்களில் அதிககாலமாய் அவள்வீட்டில் தங்கி யிருந்தவன்'' என்று கூறினுள்.

* * * *
* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் மாலை சுமார் நான்குமணிக்கு மிக்க நாணயமாய் உடையணிந்த ஒரு மூதாட்டி சுகசிங்கம்பிரபுவின் மாளிகைக்குள் பிரவேசித்தாள். அவளை யங்குள்ள ஆட்களனைவரும் அறிவார்களாதலால், உடனே யவள் பிரபு விருக்கும் அறைக்குள் கொண்டு போய் விடப்பட்டாள்.

அவள் பார்ப்பதற்குச் சிறுவர்மேல் மிக்க வாஞ்சையுடையவள் போலவும் பெரிய குடும்பஸ்திரிபோலவும், மிக்க யோக்கியமான பெரியமனுஷிபோலவும் காணப்பட்டாள். உலக அனுபவமறியாத கபடற்ற கன்னிகைகள் மிக்க சுலபமாய் அவளைப் பூரணமாய் நம்பிக்கொள்வார்கள். அவளுடைய உடைமுதலியவற்றைப் பார்த்தால் அவள் நிம்மதியான நிலைமையி லிருப்பவள்போலவே தோன்றியது. அவள் பெயர் கௌரி.

ஆகா! மேல் தோற்றத்திற்கும் உண்மைக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது. பார்வைக்கு மிக்க இரக்கமுடைய பெரிய குடும்பஸ்திரீபோல் தோன்றும் இம்மூதாட்டி உண்மையில் மிக்க கேவலமான செய்கைகளில் முதல்தர அனுபவமுடைய பாமசண்டாளியென்று கூறலாகும். இவள் ஒரு அழகான வீட்டை வாடகைக் கெடுத்துக்கொண்டு அதை நேர்த்தியாய் அலங்காரம் செய்துவைத்துக்கொண் டிருக்கிறாள். கள்ளங்கபடறியாத கன்னிகைகளை மிக்க தந்திரமாய் ஏமாற்றித் தன் கூண்டில் கொண்டுபோய் அடைத்துவிட்டு போக்கிரிகளாகிய காமுகச்செல்வந்தர்களுக்கு அவர்களை விற்று நல்ல பொருள் சம்பாதிப்பாள். தன் துஷ்டச்செயல்களை மிக்க தந்திரத்தோடும் சாமார்த்தியத்தோடும் நிறைவேற்றிக்கொள்வாள். ஆதியில் தானே விபசாரச் தொழில் செய்து வயது முதிர்ந்தபின் இத்தகைய தொழிலில் பிரவேசித்தாள். செல்வக்குடும்பங்களிலுள்ள அயோக்கிய வாலிபர்கள் ஆடவர்க ளனைவர்க்கும் இவளை நன்றாய்த் தெரியும். இவளால் அழிந்து அல்லற்பட்ட கன்னிகைகளும், தம் மக்களை யிழந்து துயர்க் கடலிலமிழ்ந்த குடும்பங்களும் எண்ணத்தொலையா. இத்தகைய உத்தம மாதுதான் இப்போது சுகசிங்கம் பிரபுவைக் காண வந்

திருக்கிறாள். அவர் அவளுடைய பழைய காரக்கிக்காரரில் ஒருவரே.

பிரபு அவளை யன்போடு வரவேற்றபின் இருவரும் சுமார் அரைமணிநேரம் சம்பாஷித்தார்கள். அவர்களுடைய அக்கிரம யோசனைகளின் விவரத்தை யிங்கு விவரமாய்க்கூற நமக்கு விருப்பமில்லையாதலால் அவர்கள் சம்பாஷணையில் ஏற்பட்ட முடிவைமட்டும் கூறிக் கதையைத் தொடர்வோம்.

வாசுதேவ நிலயத்திலிருக்கும் பத்மாட்சியின் புருடன் மிக்க போக்கிரியென்று தெரிவதால் அவனுக்குத் தெரியாமலே பத்மாட்சி தனக்கு இணங்கும்படிச் செய்யவேண்டும் என்று பிரபு கோரிக்கொண்டார். அவள் கணவனே முதலில் அதற்குச் சம்மதிக்கக் கூடுமாயினும் பிறகு தன்மேல் மான நஷ்ட வழக்கிடுவதாய் மிரட்டி அதிக பணம் பறிப்பான் என்று பிரபுவுக்கு பயம்; ஆகையால் கூடுமானவரையில் தன் பெயரை வெளியிடாமலே காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்பது அவர் கருத்து.

கௌரி "தாங்கள் அது விஷயத்தில் சற்றும் கவலை கொள்ளவேண்டாம். நான் தங்கள் பெயரைக் கூறாமலே பத்மாட்சியோடு எல்லா ஏற்பாடும் செய்துகொண்டு அவளையும் தங்களையும் என்வீட்டில் சந்திக்கும்படி செய்கிறேன். அவள் தங்களை யிதுகாறும் காணாமலிருந்தால் நீர்யாரென்று தெரியவே தெரியாது" என்றாள்.

பிரபு "அவள் என்னைக் கண்டிருக்கமாட்டாள். நீ யெப்படியும் இதை நிறைவேற்றுவாயென்று எனக்கு முன்னமே தெரியும். ஒரு சமயம் அவர்கள் கள்ளப்பெயர்களை வைத்துக்கொண் டிருக்கலாகும். இருந்தாலும் துணிந்தே தீரவேண்டும். நீமட்டும் நான் ஒரு பிரபு என்பதைக்கூட வெளியிடாதே.

கௌரி:—அதைப்பற்றித் தாங்கள் அச்சப்படவேண்டாம்.

பிரபு:—அவள் கணவன் சம்மதித் தனுப்பினுல் அவளை நீ வண்டியில் ஏற்றிக்கொள்ளும்போதே ஐந்நூறு பவுன் கொடுத்து விடு. பிறகு அவள் உன் வீட்டில் வந்திறங் கியதே அவள் கையில் வேறு ஐந்நூறுபவுன் கொடு த்துவிடு. ஆக ஆயிரம்பவுன் இதற்காக நான் அளிக் கிறேன். உனக்குச் சேரவேண்டிய பணத்திற்காக நான் ஒன்றும் கூறவேண்டியதில்லையென நம்புகிறேன். ஏனெனில் என் உதாரகுணம் நீ யறிந்ததே.

கௌரி:—பிரபுவே! தாங்களதைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவேண்டாம். எனக்கிடவேண்டிய கட்டளை யின்னு மேதேனுமுண்டோ?

பிரபு:—ஒன்றுமில்லை. நீ முன்னே பெரியக்கடை வீதியில் யாரோ ஒரு அழகிய கன்னிகையைக் கண்டு பிடித்த தாய்க் கூறினையல்லவா?

கௌரி:—ஆம் ஆம். ஆகா அவள் அழகே யழகு. அவளைப் போன்ற கெம்பீரமான வனப்புடையவளை நான் கண்டதேயில்லை. அச்சமயம் அவள் தன் பணப்பை பைப் போக்கடித்துவிட்டு கந்தபுரிக்கோ வடக்கே யுள்ள வேறு எந்த நகருக்கோ திரும்பிச் செல்லமுடி யாமல் மிக்க அனுதாரவான ஸ்திதியில் இருந்ததால் நான் அவள் முகக்குறிப்பால் அவள் நிலைமையை யறிந்து கொண்டேன். அவள் வனப்போ எவ்வளவோ ரூப லாவண்ணியமுடைய மாதரை யெல்லாம் கண்ட என் கண்களையே கவர்ந்துகொண்டது. நமது நகரி லுள்ள எந்த செல்வச் சீமானும் அத்தகைய அழகுடைய மாதைக் கண்டேயிரார்கள். அவள்

வனப்பு இப்பூலோக மாதர் வனப்பைச் சேர்ந்ததல்ல. தேவமாதென்றே யவளைக் கூறத்தகும்.

நான் இவளுக்காக நமக்கு இதுகாறும் கிடைக்காத நல்ல பரிசு கிடைக்குமென்று நிச்சயித்து மிக்க பரிவோடு அவளிடம் சம்பாஷித்தேன். அவள் அத்தகைய அழகுடையவளேனும் உலக அனுபவம் சற்றும் அறியாதவள். இந்நகரை இதுகாறும் அவள் கண்டதேயில்லை. ஆகையால் கபடின்றித் தன் நிராதரவான நிலைமையை வெளியிட்டாள். நான் உடனே யவளுக்குத் தக்க தேறுதல்கூறி வேண்டிய வெல்லா உதவிகளும் செய்வதாய் வாக்களித்து அவளை மெதுவாய் என் வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

உடனே சிந்தித்துப் பார்த்ததில் தங்கள் அந்தஸ்திற்கும் கௌரவத்திற்குமே அவள் தகுதியுடையவளென்று என் புத்தியிற்பட்டது. அதனால் தங்களுக்கே முதலில் இதைப்பற்றி தெரிவிப்பதென்று தீர்மானித்துக் கொண்டு உடனேநேராய்த் தங்கள் மாளிகைக்கு வந்தேன். ஆனால்...'' என்பதற்குள்,

பிரபு:—“துர் அதிட்டவசமாய் அச்சமயம் நான் சுகவீனமாயிருந்துவிட்டேன்'' என்றார்.

கௌரி:—ஆம். நான் துயரத்தோடு வீட்டிற்குத் திரும்பினேன், அச்சமயம் தெய்வ சங்கற்பமாய் வேறொரு காரக்கி வந்தது. அதின்படி முடிவுசெய்ய வேண்டியதா யிருந்தது. ஆனால் பிரபுவே! அதையெல்லாம் நான் வெளிப்படையாய்க் கூறமுடியாது. அன்னியர் இரகசியங்களை வெளியிடுகிற குணம் என்னிடத்தில்லையென்று தங்களுக்கு நன்றாய்த் தெரியும்.

பிரபு:—ஆம் ஆம். அதைக் கூறும்படி நான் உன்னைக் கட்டாயப்படுத்தமாட்டேன். அன்னியர் சங்கதிகளை நீ

யென்னிடம் கூறிவிட்டால் என் சங்கதிகளையும் அப்படித்தான் இன்னொருவரிடம் கூறுவாயென்றே நான் நினைக்கவேண்டியதாகும்.

கௌரி:—ஆனால் இன்னொரு சங்கதி யும்மிடம் கூறுகிறேன். அது அன்னியருடைய சங்கதியாயினும் அதைக் கூறுவதில் குற்றமில்லை. அதாவது அந்த அயோக்கியப் பயலாகிய கர்னல் மாரப்பன் என்னிடம் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டான். ஒரு காசும் வருகிற வழியாய்க் காணோம். நான் அவன் யோக்கியதையை வெளியிடப் போவதாய்க் கூறிவிட்டேன். இதோ ஆரம்பித்துவிட்டேன்.

பிரபு:—சே சே! இது அநீதம். அவன் மிக்க கள்ளப்பயலே. இனி யவன் நட்பைக் கத்தரித்துவிடவேண்டியதே. இதுமட்டுமல்ல அவனைப்பற்றி வேறொரு விஷயமும் நான் சமீபகாலத்தில் கேள்விப்பட்டேன். அவன் ஒரு கசாப்புக்காரன் புத்திரியை மணம் புரிந்துகொண்டு அவளுக்குக் கிடைத்த திரண்ட சீதனத்தையெல்லாம் அழித்துவிட்டானாம்.

கௌரி:—ஆம். இப்போது அவனும் குமாரவேலு பிரபுவும் ஒன்றாய்ச் சேர்ந்து ஆங்காங்கு பத்திரம் எழுதிக் கொடுத்து கடன்வாங்கிக்கொண் டிருக்கிறார்களென்று கேள்விப்பட்டேன். நான் அவனை சிறைச்சாலையிலாவது அடைத்துவிடுவேனேயன்றி என் பணத்தை விடமாட்டேன்.

பிரபு:—ஆனால் குமாரவேலு பிரபு கஷ்டத்தில்தா னிருக்கிறானோ?

கௌரி:—உண்மையைக் கூறுகிறேன். இருவரும் சேர்ந்து எங்கெங்கு அகப்படுமோ அங்கெல்லாம் கடன் வாங்

கிக்கொண் டிருக்கிருர்கள். மாரப்பன் தன் கடனுக் காக குமாரவேல் பிரபு ஒப்புக்கொண்ட ஒரு உண்டி யைக் கொடுக்க வந்தான். இது காலதாமதம் செய்து என்னை யேமாற்றவெண்ணிச் செய்வதென்று எனக் குத் தெரியுமாதலால் நான் அதை யங்கீகரிக்கவில்லை.

பிரபு:—அப்படியும் அவன் மனைவி மிக்க ரூபவதியென்று கேள்வி. சாதாரணமாய்க் கண்டிப்பான நடக்கை யுடையவளென்று கேள்விப்பட்டாலும் சில சமயங் களில் நேர்விரோதமான சங்கதிகளைக் கேள்விப்பட் டிருக்கிறேன். நீ யவளைப் பார்த்திருந்தால் அவளைப் பற்றி யுன்னுடைய அபிப்பிராயமென்ன? கூறு பார்ப் போம்.

கௌரி:—நான் அம்மாதைக் கண்டிருக்கிறேன், ஆனல் அவளைப்பற்றி யொரு அபிப்பிராயமும் கூற எனக்குக் கூடவில்லை. நேரமாய்விட்டது. விடை கொடுத்தால் நான் நேராய் ஒருவண்டி பேசிக்கொண்டு வெளிப் பேட்டைக்குச் செல்கிறேன். ஒருசமயம் அப் பத் மாட்சியின் கணவனைப் பார்த்தாலும் பார்ப்பேன். இன்றேல் எப்படியாவது அவளைக் கண்டு பேசி நமது வேலையைப்பற்றி முயற்சி செய்யப் போகிறேன்.

பிரபு:—ஆம் ஆம். அவர்கள் பாஞ்சாலநாட்டில் வாசம் செய்துக்கொண் டிருந்தவர்கள். ஆகையால் அவன் திடீலென்று அங்கு போய்விட்டாலும் போய்விடு வான்.

அதன்மேல் கௌரி பிரபுவிடம் விடை பெற்றுக் கொண்டு சென்ருள்.

43 - வது அத்தியாயம்.

கௌரி பிரபுவின் மாளிகையை விட்டுப் புறப்பட்டதே நேராய் அருகிலிருந்த வண்டிமேட்டிற்குச் சென்று ஒரு வண்டி பேசி யேறிக்கொண்டு நேராய் வெளிப்பேட்டைக்குச் சென்று வாசுதேவநிலயம் எங்கிருக்கிறதென்று விசாரித் தறிந்துகொண்டு அதன் எதிரிலுள்ள சுகவிலாஸ் என்ற ஹோட்டலுக்குச் சென்று பத்மாட்சியைப்பற்றி விசாரிக்க முயன்றாள். அச்சமயம் பத்மாட்சியின் புருடனாகிய பொன்னுசாமிப் பிள்ளையே ஹோட்டலில் சிற்றுண்டி யருந்திக்கொண் டிருக்கிறானென்று தெரிந்தது. கௌரி சற்றும் யோசிக்காமல் தனக்கும் அதேயறையில் சிற்றுண்டி படைக்கும்படி ஹோட்டல்காரனுக்குக் கூறிவிட்டுப் பொன்னுசாமிப்பிள்ளை யிருக்கும் அறைக்குச் சென்று ஒரு ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு தனக்குவைத்த ஆகாரத்தைப் புசித்துக்கொண்டே ஜாடையாய் பொன்னுசாமிப் பிள்ளையைப்பற்றி நோக்கினாள்.

அவளுக்கு உலக அனுபவம் நன்றாய்த் தெரியும். அதிலும் துர்நடக்கைகளில் பிரவேசித்தழிந்த ஆடவர்கள் அநேகரைப் பார்த்திருக்கிறாள். ஆகையால் சற்றுநேரத்திற்குள் அவன் அயோக்கியனாகிய போக்கிரியென்று தெரிந்துகொண்டாள். அதற்குள் அவனை யெங்கோ தான் கண்டிருப்பதாய் அவள் மனதிற்பட்டது. ஆனால் எப்போது எங்கே கண்டதென்று மனதிற்குப் புலப்படவில்லை. அதன் மேல் மெதுவாய் அவனோடு சம்பாஷிக்கத் தொடங்கினாள்.

அவள் பேச ஆரம்பித்ததே பொன்னுசாமிப்பிள்ளை அவளை நோக்கி, "ஆ! நான் உன்னை யெங்கோ பார்த்திருக்கிறேன்" என்றான்.

கௌரி:—எனக்கும் அப்படித்தான் தெரிகிறது.

பொன்னுசாமிப்பிள்ளை:—ஆ! ஏன் நீ கௌரியல்லவா? சில வருடங்களுக்குமுன் நான் உன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன்.

கௌரி:—ஆம் ஆம். தங்கள் பெயர் பொன்னுசாமிப்பிள்ளை யல்லவா?

பொன்:—ஆ! உனக் கெப்படி தெரியும்?

கௌரி:—நான் இந்த அறைக்கு வரும்போது ஹோட்டல் வேலைக்காரி "அங்கு எதிரிலுள்ள மாளிகையிலிருக்கும் பொன்னுசாமிப்பிள்ளை யிருக்கிறார்" என்று கூறினாள்.

பொன்:—நான் முன்பு உன் வீட்டிற்கு வந்துகொண் டிருந்தபோது என் பெயரைக் கூறவில்லை.

கௌரி:—இருக்கலாம். ஆயினும் உமது அடையாளம் மட் டும் எனக்கு மறக்கவில்லை.

பொன்:—நல்லது நீ பழைய பேரமேதான் செய்துகொண் டிருக்கிறாயோ ?

கௌரி:—ஆம். அதேதான். தாங்கள் இப்போது வந்து என் வீட்டைத் தரிசிக்கவேண்டும்.

பொன்:—இப்போது ஒரு நேர்த்தியான அரண்மனையா யிருக்கும்.

கௌரி:—ஆம். கடவுள் தயவால் கொஞ்சம் செல்வம் சம் பாதித்தேன். அதைச் சாக்கிரதையாய்க் காப்பாற்றி வருகிறேன்.

பொன்:—ஆ! எனக்கும் அத்தகைய அதிஷ்டம் கிடைத் தால்.......நீ பழைய அறிமுகமானவளாதலால் உன் னிடம் மனம்விட்டுக் கூறுகிறேன். தற்சமயம் நான் செலவிற்கு இக்கட்டான நிலைமையி லிருக்கிறேன். என்மனைவியோடு கொஞ்சகாலமாய் இங்கு வந்திருக்கி றேன். சீக்கிரத்தில் மறுபடி பாஞ்சால நாட்டிற்குச் சென்றுவிடுவேன். ஆ! என்ன காரியமாய் இப்பிர தேசத்திற்கு வந்தாய்?

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரையென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனசதைக் கரைக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915வரு ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
2-பாகமும் ...	4	0	தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ..	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்ன தம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.